பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 5 திங்கட்கிழமை (19-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174

# இரத்தினபுரியில் பெரும் மண்சரிவு 75 பேர் மரணம்!

## தென்னிலங்கையில் சுதந்திரத்துக்குப் பின் வரலாறு காணாத வெள்ள அனர்த்தம்!

இரத்தினபுரி,மே19

**தென்னிலங்கையில் கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் சூறாவளி மழையினால் பெரும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒரு நிலச்சரிவில் எழுபத்தைந்துக்கும் அதிகமானோர் புதையுண்டுவிட்டனர் என்று அஞ்சப்படுகிறது.**

வெள்ள அனர்த்தங்களில் இது வரை குறைந்தது 100 பேர் உயிரிழந்திருக்கின்றனர். ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கின்றன.

வெள்ளத்தால் சூழப்பட்ட பல கிராமங்களில் நூற்றுக்கணக்கானோர் இன்னும் உயிரைக் கையில் பிடித்தபடி சிக்குண்டிருக்கின்றனர். அவர்களை மீட்கும் அவசர மீட்புப் பணிகள் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு மோசமாக உள்ளது. பலநூறு வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. மலைநாட்டி

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஜி.சீ.ஈ. பரீட்சைகள் இன்று நடைபெறா!

## நாடு முழுவதும் ஒத்திவைப்பு

கொழும்பு, மே19

தற்போது நடைபெற்றுவரும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் இன்று நடைபெறவிருந்த பாடங்கள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

தென்னிலங்கையில் பெரும் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் மோசமான வெள்ள அனர்த்தம் காரணமாகவே இன்றைய பரீட்சைகளை நாடு முழுவதும் ஒத்திவைக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளையுடன் முடிவடைய உள்ளது. பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் அனைத்தும் நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாக இருநதன. எனினும் இன்றைய பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுவதால் பாடசாலைகளை ஆரம்பிக்கும் தினமும் ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இன்றைய தினத்திற்குரிய பரீட்சைகளை மீண்டும் எப்போது நடத்துவது என்பது பற்றியும், நாளைய தினத்திற்கான பரீட்சைகள் திட்டமிட்டவாறு நடைபெறுமா அல்லது அவையும ஒத்திவைக்கப்படுமா என்பது பற்றியும் பாடசாலைகளை எப்போது மீள ஆரம்பிப்பது என்பது தொடர்பாகவும் இன்று கல்வி அமைச்சில் நடைபெறும் அவசர மாநாட்டில் முடிவு செய்யப்படும் எனத் தெரியவநதது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

**வெள்ள அனர்த்தம்: விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்....**

# தென்னிலங்கையின் பல பகுதிகள் இருளில்!

கொழும்பு, மே19

வெள்ள அனர்த்தங்களை அடுத்து தென்னிலங்கையின் பெரும் பிரதேசம் நேற்றிரவு இருளில் மூழ்கியது. பல மாவட்டங்களில் மின் விநியோகம நிறுத்தப்பட்டிருக்கிறது. பிரதான மின்சார விநியோக கேபிள்கள் அறுந்தும், சேதமடைந்தும் போனதால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. தலைநகர் கொழும்பு முழுவதும் நேற்றிரவு சிறிது நேரம் இருளில் மூழ்கியது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொலைபேசி, நீர் விநியோக சேவைகளும் முற்றாகச் சீர்குலைந்திருக்கின்றன. ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

(ஐ)

# படைமுகாம் நிறுவுவதை ஆட்சேபித்து மல்லாகத்தில் மக்கள் நேற்று மறியல்!

## போக்குவரத்தை தடைசெய்து மூன்று மணிநேரம் போராட்டம்

வலிகாமம் வடக்கு,மே19

மல்லாகத்தில் புதிதாக இரு இடங்களில் முகாம்களை நிறுவ இராணுவத் தரப்பு மேற்கொண்டுவரும் முயற்சிகளை ஆட்சேபித்து நேற்று மக்கள் அங்கு மறியல் போராட்டம் நடத்தினர். நூற்றுக் கணக்கான மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு முகாம் நிறுவப்படும் இடங்களுக்கு அருகே திரண்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மல்லாகம் ரயில்நிலையத்துக்குச் சமீபமாக ஏழாலை சந்தைப் பகுதியிலும், மல்லாகம் நீதிமன்ற வளாகப் பகுதியிலும் புதிதாகப் படைமுகாம்களை நிறுவுவதற்கான முன் ஆயத்த வேலைகளைப் படையினர் கடந்த சில தினங்களாக ஆரம்பித்திருக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புக்கள் அமைந்த இடங்களில் முகாம்களை நிறுவும் இந்த முயற்சிக்கு அப்பிரதேச மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிழம்பியுள்ளது.

மல்லாகம், ஏழாலைப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று ஒன்றுகூடி தங்கள் அடையாள எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நேற்று முற்பகல் ஏழாலைச் சந்தைப்குதியில் ஒன்றுதிரண்ட நூற்றுக் கணக்கான பொதுமக்கள் அந்த இடத்தில் படையினர் முகாம் அமைத்து வருவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்னதாக ஏழாலைச் சந்தியிலிருந்து பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பேரணியாக அவ்விடத்துக்கு வந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஏழாலைச் சந்தைப் பகுதியில் மக்கள் கூடிநின்ற இடத்துக்கு வருகை தந்த அப்பகுதி இராணுவ மேஜர் மற்றும் ஊரெழு முகாம் பிரிகேடியர் ஆகியோர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் கலந்துரையாடினர்.

சுமார் ஒரு மணிநேரம்வரை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மக்கள் பின்னர் அவ்விடத்திலிருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் அமைப்பதை எதிர்த்து மக்கள் எழுப்பிய கோஷங்கள்

வலிவடக்கு, மே19

மல்லாகம் மற்றும் ஏழாலைப் பகுதிகளில் புதிதாகப் படைமுகாம்கள் நிறுவுவதை ஆட்சேபித்து நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர் வைத்திருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள் சில பின்வருமாறு:-

★ தெற்கில் அபிவிருத்திப்பணி, இங்கு மக்கள் வாழ்விடங்களில் இராணுவ முகாம்!

★ மக்கள் வாழ்விடங்களில் இராணுவ முகாம்கள் அமைப்பதை உடன் நிறுத்துக!

★ இன்றைய தேவை இராணுவ முகாம்களா? இல்லை, மக்களின் அன்றாட வாழ்விடப் பிரச்சினைக்கான தீர்வே!

★ இராணுவமே சமாதானத்தைக் குழப்பாதே!

★ ஆலயங்கள், மக்கள் குடியிருப்புக்களில் இராணுவ முகாம்களை அமைக்காதே!

★ உடன்படிக்கையை மீறாதே! புதிய இராணுவ முகாம்களை அமைக்காதே!

(ஐ-5-86)

## குருவாயூர் கோயிலில் பிரதமர் ரணில் வழிபாடு

திருவானந்தபுரம்,மே19

இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மனைவி மைத்திரியுடன் கேரளாவுக்கு 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை அவர் தன் மனைவியுடன் குருவாயூர் கோவிலுக்குச் சென்று வழிபட்டார். பினனர் குமாரகோம் தாஜ் கார்டன் ஹோட்டலில் தங்கினார்.அங்கு ஒரு காலத்தில் பிரதமர் வாஜ்பாய் விஜயம் செய்த போது தங்கிய 18ஆம் இலக்க அறையிலேயே பிரதமர் ரணில் தங்கினார். அங்குள்ள வெம போடு ஏரியில் நேற்று முன்தினம் பகல் 3 மணி நேரம் படகுச சவாரி செய்தார்.

## போராட்டம் முடிந்த கையோடு துப்புரவுப் பணியில் படையினர்

யாழ்ப்பாணம்,மே19

மல்லாகம் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக ஏழாலைச் சந்தைப் பகுதியிலும், மல்லாகம் நீதிமன்ற வளாகப் பகுதியிலும் புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிராக நேற்று முற்பகல் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் முடிவடைந்த கையோடு படையினா அவ்விடங்களில் மீண்டும் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடந்தவேளை முகாம் அமைப்பதற்கான தமது வேலைகளை படையினர் இடை நிறுத்தியிருந்தனர். எனினும், பின்னர் போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றதும் பிற்பகல் முதல் தமது துப்புரவுப் பணியை படையினர் மீண்டும் ஆரம்பித்தனர்.

(ஐ-5-86)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

### இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டையில் நிலைமை படுமோசம்!

# தெற்கில் வெள்ளக் கொடூரம்; 50 இற்கும் அதிகமானோர் பலி!

## ஐம்பதாயிரம் குடும்பங்கள் நிர்க்கதி

கொழும்பு,மே19

தென்னிலங்கையில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை மற்றும் பேய்க் காற்றினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களில் ஐம்பதிற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்; 50 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள நிர்க்கதியாகியுள்ளன.

வெள்ளத்தால் சூழப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான மக்களை மீட்கும் அவசரப்பணி முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

இரத்தினபுரி மாவட்டம் மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் நிலைமை மோசமாக இருக்கின்றது என்று அறிவிக்கப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப் பெருக்கு இது எனக் கூறப்படுகிறது.

**இரத்தினபுரியில்**

இரத்தினபுரி நகர் 8 அடி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் பல குடும்பங்கள் தங்கள் வீடுகளின் கூரைகள்மீது தஞ்சம் புகுந்துள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் 49 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என அரச அதிபர் மாலினி பிரேமரத்ன தெரிவித்தார். அங்கு சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரியில் எலபாத்தயில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 35 பேர் வரை இறந்துள்ளனர். மேலும் பலர் இம் மண்சரிவில் சிக்குண்டு இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இரத்தினபுரியில் மேலும் 14 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் காணாமற்போயுள்ளனர் எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து மக்களை மீட்டெடுப்பதே அவசரப் பணியாகும் என்றும், அதன் பின்னரே சமைத்த உணவுகள், உலர் உணவுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

வெள்ளத்[illegible] சூழப்பட்ட பகுதிகளில் இருந்[illegible]க்களை மீட்டெடுக்கும் முயற்சியில் கடற்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.கடற்படையினரின் இரு படகுகள் மாத்திரமே மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

**கூரைகளில் தஞ்சம்**

திடீரென ஏற்பட்ட வெள்ளத்தினால் செய்வதறியாது திகைத்த ஏராளமான மக்கள் தங்களின் வீடுகளின் கூரைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். உணவோ, குடிக்க நல்ல தண்ணீரோ கிடைக்காமல் காற்று, மழைக்கு மத்தியில் அவர்கள் பரிதவிக்கின்றனர் எனக் கூறப்பட்டது.

இரத்தினபுரி - பலாங்கொடை வீதியில் பெல்மாடுல்ல என்ற இடத்தில் மண்சரிவில் ஒருவீடு முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இரத்தினபுரிக்கும் ஏனைய பல இடங்களுக்குமான போக்குவரத்துக்கள் நேற்று மாலைவரை துண்டிக்கப்பட்டிருந்தன.

இரத்தினபுரி பொலீஸ் நிலையமும் நீரில் மூழ்கியுள்ளது.

**மண்சரிவு அனர்த்தம்**

காவத்தை கலல்எல்ல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி எட்டு தோட்டத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

அங்கு பெரும் மண்சரிவு ஏற்பட்டு லயன் அறைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன எனவும் 38 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் மேலும் மண்சரிவுகள் இடம்பெறுவதற்கா[illegible] அபாயம் தென்படுகிறது. அதனால் அப்பகுதியில வசித்த மக்கள் வேற இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

குடுகல் வத்தையில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த கட்டுமரம் ஒன்று வெள்ளத்தில் மூழ்கியதில் நால்வர் உயிரிழந்தனர்.

கலவானை, எலப்பாத்த, நிவித்திகல, குருவிற்ற, பெல்மதுல்ல, கிரியெல்ல ஆகிய பிரதேசங்களிலும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

**தென்மாவட்டங்களில்**

நாட்டின் தென்மாவட்டங்கள் பலவற்றிலும்கூட வெள்ள அனர்த்தம் கோர விளைவுகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

அக்குரஸ்ஸ, உடுகம, நெளுவ, ஹினிதும, நாகொட ஆகிய பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஹினிதுமயில் 50 குடும்பங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. இவர்களை விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 250 வீடுகள் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ளன.

உடுகம பொலீஸ்நிலையமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

**மலையகத்தில்**

மலையகப் பகுதியான லட்டவளை யில் தனியார் தோட்டமொன்றில் மண்சரிவு காரணமாக 38 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இவர்கள் வாழ்ந்த லயன் அறைகள் எந்தநேரத்திலும் இடிந்துவிடும் நிலையில் உள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை, வலஸ்முல்ல ஆகியன அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் போருவ, கொடப்பிட்டிய, அக்குரஸ்ஸ, தெனியாய ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் இப் பிரதேச மக்கள வீடுகளை இழந்து, சூழவுள்ள உயர் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சரித்திரப் புகழ்பெற்ற பேருவப் பள்ளிவாசலினுள் பத்தடி உயரத்துக்கு வெள்ளம் பாய்கிறது.

**போக்குவரத்தில் பாதிப்பு**

கொழும்பு - பதுளை, கொழும்பு - எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி - நிவித்திகல, இரத்தினபுரி - பாணந்துறை, உடுகம - அக்குறஸ்ஸ, ஹினிதும - நெளுவ, காலி - தெனியாய வீதிகள் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யுமாறு ஜனாதிபதி பணிப்பு

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படையினர், பொலீஸார் மற்றும் மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்களை மீட்டெடுக்கக் கடற்படையின் படகுகளை உபயோகிக்கும்படியும் அப்படியும் பற்றாக்குறை ஏற்பட்டால் மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட, உயிரிழந்தவர்களின் விவரங்களைச் சேகரிக்க ஜனாதிபதி செயலகத்தில் தனியான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபெந்தி ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இவர் கொழும்பு திரும்பியதும் வெள்ள அனர்த்தம் தொடர்பான அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார். (ஐ)

## வெள்ள அனர்த்தங்களை பிரதமர் பார்வையிட்டார்!

கொழும்பு,மே19

இந்தியாவிலிருந்து நேற்று நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே வெள்ளத்தால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

வெள்ள அனர்த்தங்களை அவர் நேரில் பார்வையிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனைகளை நடத்தி உரிய உத்தரவுகளை விடுத்து, இதேவேளை சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீரவும் நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

வெள்ள அகதிகளுக்கு உதவவென சமூக சேவைகள் அமைச்சு முதற்கட்டமாக 87 லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, மாத்தறையில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பாக அமைச்சர் அஸ்வர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இயற்கை அனர்த்தங்களினால் தோட்டப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், இழப்புக்கள் பற்றிய முழுமையான விவரங்களை தனக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு அமைச்சர் பெ.சந்திரசேகரன் தனது கட்சியின் பிரதேச அமைப்பாளருக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ)

## கிராம அலுவலர் சம்பள நிலுவையை உடன் வழங்க அமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம்,மே19

கிராம அலுவலர்களுக்கு 1995 இல் அனுமதிக்கப்பட்ட சம்பள உயர்வில் இதுவரை வழங்கப்படாத 5 மாதங்களுக்குரிய நிலுவையை உடனடியாக வழங்க உள்ளூராட்சி அமைச்சு இணங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சம்மேளனப் பிரதிநிதிகள கடந்த 8ஆம் திகதி அமைச்சர் அலிக் அலுவிகாரவைச் சந்தித்துப் பேசியபோது இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சம்மேளனம விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த 08.05.2003 இல் நாடாளுமன்றக் கட்டடத்தில், உள்நாட்டு அமைச்சர் அலிக் அலுவிகாரவுடன், அவரின் அறையில் வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சம்மேளனத்தினர் நடத்திய கலந்துரையாடலின் போது இதுவரை தீர்க்கப்படாத சில கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நடந்த இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை, அமைச்சின் செயலாளர்கள் திருமதி பி.எம்.பி. ஜயவர்த்தன, திருமதி எம்.பெயின்ட், வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சம்மேளனத் தலைவர் பவசுதகுமார், செயலாளர் கே.வாமதேவன், பொருளாளர் எஸ்.செல்வராசா, சம்மாந்துறை பிரதிநிதி எம்.எம்.சலீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்வுகள்வருமாறு:-

01. அதியுயர்வு சிறப்புப் பதவிக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 169 கிராம உத்தியோகத்தர்களுக்கும் நியமனம் வழங்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. பொதுச் சேவை ஆணைக்குழுவின் முடிவின்படி 109 கிராம உத்தியோகத்தர்களுக்கு மட்டும் நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

02. தரம் ஒன்றுக்கான நேர்முகப் பரீட்சையில் பாதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் மேன்முறையீடு ஏற்கப்பட்டு மூவர் கொண்ட குழு ஒன்றின்மூலம் கிராம உத்தியோகத்தர்களை நேரில் விசாரித்து நீதி வழங்குவது என உறுதி அளிக்கப்பட்டது.

03. 1995 இல் அனுமதிக்கப்பட்ட சம்பள உயர்வில் இதுவரை வழங்கப்படாத 5 மாத நிலுவைப் பணத்தை உடன் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

04. யாழ்.மாவட்டத்தில் 1994 ஆம் ஆண்டு தெரிவான 14 கிராம உத்தியோகத்தர்கள் அப்போதைய சூழ்நிலையில் தீவகம் செல்ல முடியாத நிலையில் பின்தள்ளப்பட்டு நியமனத்தை 01.08.1994 இல் இருந்து வழங்குவதெனத்தீர்மானிக்கப்பட்டது (பாதிக்கப்பட்டவர் அரச அதிபரின் அனுமதியுடன் உடன் விண்ணப்பிக்கலாம்).

05. நிறுத்தப்பட்டிருந்த பதில் கடமை வேதனம் தொடர்ந்து 3 மாதங்களுக்கு மேல் பதில் கடமை புரியும் கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் (இதற்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது).

06. காகிதாதிகள், சீருடை, மிதிவண்டிக் கொடுப்பனவு என்பவற்றை அதிகரிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் வழங்கப்படும்.

07. வடக்கு - கிழக்கில் உள்ள தரம் 1 இற்கான நேர்முகப்பரீட்சையில் பாதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் நேர்முகப்பரீட்சையினை திருகோணமலையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

(ஐ)

## தமிழ், முஸ்லிம் விவசாயிகளுக்கு திட்டமிட்டு துரோகம்,தலைஅடி!

### அட்டாளைச்சேனை அலுவலகம் அம்பாறைக்கு

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் உள்ள முக்கிய அரச அலுவலகங்களை அம்பாறை நகருக்கு கொண்டு செல்லும் திட்டத்தின் ஓர் அங்கமாக அட்டாளைச் சேனையில் உள்ள விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தை மூடிவிட்டு அந்த அலுவலகப் பணிகளை அம்பாறை அலுவலகம் மூலம் மேற்கொள்ளுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கரையோரப் பகுதியில் உள்ள சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் விவசாயிகளுக்கு இது பலமான தலை அடி; அவர்களுக்கு செய்யும் பச்சைத் துரோகம் என்று எங்கும் கண்டனக் குரல் எழுந்திருக்கிறது. விவசாயிகள் சங்கங்கள் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. இந்த சூழ்ச்சித் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று விவசாய கால்நடை வளர்ப்பு அமைச்சுக்கு மகஜர் பறக்கின்றன.

தென்கிழக்கு விவசாயிகள் பேரவை என்ற அமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுத்துச் செல்கிறது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் உள்ள தமிழ் மொழி பேசும் விவசாயிகளின் நன்மை கருதி அட்டாளைச் சேனையில கடந்த 05.12.2001 இல் விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெற்காணிகளைப் பராமரிக்கத் திறக்கப்பட்ட அலுவலகம் இது. இந்த அலுவலகத்தை மூடிவிட்டு சுமார் 60 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெற்காணிகளை அம்பாறையிலிருந்து பராமரிக்கும் ஓர் அலுவலகத்தின் ஊடாக அட்டாளைச்சேனை அலுவலகப் பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டதன் மர்மம் என்ன என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

அட்டாளைச்சேனையில் செயற்பட்டுவரும் இவ்விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள பொத்துவில் தொடக்கம் பெரியநீலாவணை வரையுள்ள தமிழ், முஸ்லிம் விவசாயிகள் பெரும் நன்மை பெற்று வருகின்றனர்.

இந்த அலுவலகத்தின் கீழ் சம்மாந்துறை, பொத்துவில், நிந்தவூர், அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களிலுள்ள சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கென நான்கு வலயக் காரியாலயங்களும் செயற்பட்டுவருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கென 40 விவசாயப் போதனாசிரியர்களும் இவ் அலுவலகத்தின் கீழ் செயற்பட்டு சிறப்பாக சேவையாற்றி வருகிறார்கள்.

இவ்வாறான நிலையில், அவசர அவசரமாக இந்த அலுவலகத்தை மூடிவிடும்படி விவசாய அமைச்சு அறிவித்திருப்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று கேட்கப்படுகிறது.

இது தொடர்பாக கல்லோயா ஆற்றுத்திட்ட முகாமைத்துவத்திற்குட்பட்ட விவசாய அமைப்புக்கள் பல இடங்களில் கூடிக் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை விவசாய அமைச்சருக்கும் மற்றும் பல அமைச்சர்களுக்கும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்து வருகின்றன.

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்கு; 6 பேர் உயிரிழப்பு; 30 பேர் காயம்!

## அமைதிப் பேச்சு முடிவடைந்தபின் சில மணித்தியாலங்களில் சம்பவம்


ஜெருசலேம்,மே19

**இஸ்ரேலில் நேற்றுக்காலை இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர் இதில் 30 பேர் வரை காயமடைந்தனர்.**

**அமைதிப் பேச்சு நடந்து முடிந்த சில மணித்தியாலங்களில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் நேற்று உள்ளூர் நேரப்படி காலை 6 மணிக்கு இத்தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது.

நகரின் சனசந்தடிமிக்க பிரதான சந்திப் பகுதியான பிரெஞ்ச ஹில்லில் பஸ் ஒன்றை இலக்கு வைத்துத் தாக்


தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற பஸ்

குதல் நடத்தப்பட்டது.

இப்பகுதி பஸ்தரிப்பிடத்தில் காத்திருந்த தற்கொலைத் தாக்குதலாளி, பயணிகளுடன் பயணியாக பஸ்ஸிற்குள் ஏறிக்கொண்டதாகவும் - தரிப்பிடத்திலிருந்து பஸ் புறப்பட்ட சில நிமிடங்களில் அவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தாகவும் - சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் பஸ் பலத்த சேதமடைந்தது. பஸ்ஸிலிருந்த 6 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் 30 பேர் வரை கடுங் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அங்கு பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். அவர்கள் சந்தேகத்திற்கிடமாக அப்பகுதியில் நடமாடிய ஒருவரை சோதனையிட அழைத்தபோது, அந்த நபரும் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தார். ஆயினும், இதில் வேறு எவரும் காயமடைவில்லை. மற்றொரு பஸ்ஸை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்த இந்த நபர் காத்திருந்திருக்கலாம் என்று ஜெருசலேம் நகரப பொலீஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பிரதமரின் ஜெருசலேம் அலுவலகத்தில் பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் நேற்றுமுன்தினமிரவு பேச்சு நடத்தினர். கடந்த இரண்டாண்டுகளில் இடம்பெற்ற முதலாவது உயர்மட்ட பேச்சு. இப்பேச்சைத் தொடர்ந்து மேற்காசியாவில் அமைதி முயற்சியில் முன்னேற்றம் ஏற்படுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இப்பேச்சு இடம்பெற்ற சில மணித்தியாலயங்களில் தற்கொலைத் தாக்குதல் நடந்திருப்பதால் அந்த எதிர்பார்ப்பு பாதிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இஸ்ரேலிய - பலஸ்தீனப் பிரதமர்களுக்கிடையேயான பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்குக் கரைப் பகுதியில் இடம்பெற்ற வேறொரு தற கொலைத் தாக்குதலில் இஸ்ரேலியர் ஒருவரும், அவரது கர்ப்பிணி மனைவியும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

**பின்லேடன் காரணம்**

அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் உத்தரவுப்படிதான் சவூதி அரேபியாவில் தாக்குதல் நடந்துள்ளதாக அமெரிக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மலேஷியா, இந்தோனேஷியா, லைபீரியா, சோமாலியா, கென்யா போன்ற நாடுகளிலும் அடுத்த தாக்குதல் நடத்தப்படலாம் என்று பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

## இணையதள மோசடி விவகாரம்: அமெரிக்காவில் 130பேர் கைது!

வாஷிங்ரன்,மே19

அமெரிக்காவில் இணையதளத்தைப் பயன்படுத்தி பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பாக 130 பேரை அமெரிக்கப் பொலீஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ரூபா 170கோடி பெறுமதியான டொலர்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இணையதளம் மூலமாக ஏலம் விடுதல், வேலைவாய்ப்பு மற்றும் வியாபார தொடர்பு போலி மென்பொருள், பதிப்புரிமை போன்றவற்றில் மோசடி செய்து பொதுமக்களை ஏமாற்றி வந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்கப் புலனாய்வுப் பொலீஸார் அஞ்சலக ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு தனியார் புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் சில வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த மோசடி தொடர்பாக கடந்த வாரம் மட்டும் 50இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். 55 இடங்களில் திடீர் சோதனை மேற்கொண்டதில் 12 இடங்களில் முறைகேடுகள் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பாக். சிறையில் அடைபட்டிருந்த 20இந்தியர்கள் விடுவிப்பு

இஸ்லாமாபாத்,மே19

பாகிஸ்தான் சிறைகளில் உள்ள 20 இந்தியர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நட்புறவுக்கு மீண்டும் வழிவகுக்கும் வகையில் பாகிஸ்தான் சிறையிலுள்ள இந்தியர்களை விடுவிக்கப்போவதாக பாகிஸ்தான் பிரதமர் மீர் ஜபாருல்லாகன் ஜமாலி இம்மாத தொடக்கத்தில் அறிவித்திருந்தார்.

அதன்படி இந்திய மீனவர்கள் 300 பேரையும் சீக்கிய இளைஞர்கள் 22 பேரையும் இந்தியப் படகு ஊழியர்கள் 14பேரையும் விடுவிக்க பாக். அரசு முடிவெடுத்தது.

இதில் படகு ஊழியர்கள் 14 பேரும் சீக்கிய இளைஞர்களில் 6 பேரும் விடுவிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் சிறையிலுள்ள இதர சீக்கியர்களையும் இந்திய மீனவர்களையும் அடையாளம் கண்டறியும் பணிகளை இந்தியத் தூதரகம் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகள் நிறைவடைந்தவுடன் அவர்களும் விடுவிக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.(ஒ)

## கணவனை மகிழ்விக்க நினைத்து 'செண்ட்' பூசிய மனைவி சிறையில்!

### அமெரிக்காவில் சம்பவம்

புளோரிடா,மே19

கணவனை மகிழ்விப்பதற்காக மிதமிஞ்சிய அளவில் 'செண்ட்' உபயோகித்தார் மனைவி. அதுவே அவருக்கு வினையாக அமைந்துவிட்டது. கணவர் கொடுத்த புகாரின் பேரில் தற்போது சிறையில் கம்பி எண்ணி வருகிறார் மனைவி. இச்சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

இரசாயனப் பொருள்களின் வாசனை தனக்கு ஒத்துக்கொள்ளாது. எனவே அதைப் பயன்படுத்தி தனது உடல் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் நோக்கிலே மனைவி இவ்வாறு செய்துள்ளார் என்று கணவரான டேவிட் டெய்லர் (46) பொலீஸில் புகார் செய்தார்.

இதையடுத்து அவரது மனைவியான் டெய்லர் (36) கடந்த வாரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

வீட்டிலிருந்து இரசாயனப் பொருளகள் கலந்த வாசனை எனது மனைவியின் பால் என்னை ஈர்க்கவில்லை மாறாக எனக்கு தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் மற்றும் உடல் வலியை ஏற்படுத்தியது என்று டேவிட் புகாரில் கூறியிருந்தார்.

ஆனால், திருமணமாகி 3 ஆண்டுகளாக செண்ட் மற்றும் வாசனைத் திரவியங்களை தாம் அவ்வப்போது பயன்படுத்தி வருவதாகவும் அது கணவருக்குப் பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை என்று மனைவி பதிலளித்துள்ளார்.

உண்மையைத் திரித்து பெரும் பொய்யாக்கி விட்டதாகக் கணவர் மீது புகார் கூறினார் மனைவி டெய்லர்.

கடந்த மார்ச்சில் கணவர் டேவிட்டுக்கு வேலை பார்த்த நிறுவனத்திலிருந்து பணிக்கொடை உள்ளிட்ட தொகையாக ஒரு கோடி ரூபா கிடைத்தது. அது தொடர்பாக ஏற்பட்ட தகராறுதான் செண்ட் வடிவில் பொலீஸ் நிலையம் வரை வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## மோதலின் நடுவே சிக்கி நாகப்பா சாகவில்லை!

### விசாரணைக் குழு அறிக்கை



பெங்களூர்,மே19

கர்நாடகாவின் முன்னாள் அமைச்சர் நாகப்பா வீரப்பனுக்கும், அதிரடிப் படையினருக்கும் இடையே காட்டில் நடந்த மோதலில் சிக்கி உயிரிழக்கவில்லை என்று விசாரணை அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

வீரப்பனால் கடந்த ஆண்டு நாகப்பா காட்டுக்குள் கடத்திச் செல்லப்பட்டார். பிறகு அவரது உடல் காட்டுக்குள் பிணமாக மீட்கப்பட்டது.

நாகப்பாவின் மார்பில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இருந்தது. இது தொடர்பாக வீரப்பன் அனுப்பி இருந்த ஒலிநாடாவில் தமிழக அதிரடி படைக்கும், தங்களுக்கும் காட்டுக்குள் துப்பாக்கிச் சண்டை நடந்ததாகவும் அப்போது அதிரடிப்படை சுட்டு நாகப்பா செத்துவிட்டதாகவும் கூறி இருந்தார்.

ஆனால், தமிழக அதிரடிப் படை பொலீஸார் இதை மறுத்தனர்.

நாகப்பா எப்படி செத்தார் என்பதை கண்டுபிடிக்க விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டும் 5மாதமாக இதில் எந்த துப்பும் துலங்கவில்லை. கர்நாடக அரசு இந்த விடயத்தில் தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறது.


இதற்கிடையே நாகப்பா உடலில இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டும், துப்பாக்கி சண்டை நடந்தாக கூறப்படும் இடத்தில் சிதறிக்கிடந்த குண்டுகளையும், தோட்டா பரிசோதனை ஆய்வாளர்கள் சோதித்து பார்த்து அறிக்கை தயாரித்தனர். அந்த அறிக்கை கர்நாடக அரசிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செங்கடி காட்டுப் பகுதியில் துப்பாக்கி சண்டை நடந்ததாக சொல்லப்படுவது தவறு. நாகப்பா உடல் கிடந்த இடம் அருகே துப்பாக்கிச் சண்டை எதுவும் நடக்கவில்லை. அங் குள்ள மரங்களில் துப்பாக்கிக் குண்டு பாயவில்லை.

செங்கடி காட்டில் சிதறிக்கிடந்த குண்டுகள் ஏ.கே.47ரக துப்பாக்கி குண்டுகள் ஆகும். 3துப்பாக்கிகளில் இருந்து அவை வெடிக்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## பாப்பரசரின் 83 ஆவது பிறந்தநாள்



வத்திகான்,மே19

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று தனது 83 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். இதனையொட்டி வத்திகானின் சென். பீற்றேர்ஸ் சதுக்கத்தில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விழாவில போலந்து நாட்டவர் இருவர் மற்றும் இரு இத்தாலியர்களுக்கு 'புனிதர்' பட்டங்களைப் பாப்பரசர் வழங்கினார்.

பதவியேற்றதன் 25 ஆவது ஆண்டினை இந்த ஆண்டின் இறுதியில் பாப்பரசர் நிறைவு செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சிகரெட் புகையால் பாதிப்படைந்த பெண்ணுக்கு ரூ.53 கோடி நஷ்டஈடு

### அமெ.நீதிமன்றம் உத்தரவு

நியூயோர்க்,மே19

முன்னாள் பெண் ஊழியருக்கு சுமார் 53 கோடி ரூபா நஷ்டஈடு வழங்க மொடல் நிறுவனத்துக்கு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள எலைட் மொடல் நிறுவன ஊழியர்களின் சிகரெட் புகையால் உடல் நலன் பாதிகப்பட்டதாகக் கூறி அந்நிறுவன முன்னாள் ஊழியர் விக்டோரியா கல்லேகோஸ் (வயது 32) வழக்குத் தொடர்ந்தார்.

ஏற்கனவே ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்த தமக்கு சிகரெட் புகையால் உடல் நலன் மேலும் பாதிப்புக்கு உள்ளானது என்று அந்நிறுவன உயர் அதிகாரிகளிடம் விக்டோரியா புகார் கூறினார். இதையடுத்து, வேலை கற்றுக் கொள்வதை விட்டுவிட்டு புகார் கூறுவதிலேயே விக்டோரியா நாட்டம் செலுத்தி வருகிறார் என்று மேலதிகாரிகள் அவரைத திட்டியுள்ளனர்.

இதனால், அவரது மனம் மேலும் வேதனைக்கு உள்ளானது.

இதையடுத்து, அமெரிக்காவில் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் மனித உரிமைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்தார்.

மனுவிசாரணை நடத்திய நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்தது.

## மலேஷியாவில் 'சார்ஸ்' மாநாடு

சார்ஸ் நோய் குறித்த சர்வதேச விஞ்ஞானிகள் மாநாட்டை மலேஷியாவில் உலக சுகாதார அமைப்பு அடுத்த மாதம் நடத்துகிறது.

எதிர்வரும் ஜூன்மாதம் 17,18ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், மருத்துவ நிபுணர்கள், 200 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## தீவிரவாதிகளின் அடுத்த குறி

சவூதி அரேபியாவில் கடந்த சில நாள்களுக்கு முன் நடந்த தொடர் குண்டுவெடிப்பில் 34 பேர் பலியானார்கள். இதைத் தொடர்ந்து மொரோக்கோவில் கார்க்குண்டுகள் வெடித்ததில் 30 பேர் பலியானார்கள்.

இவற்றுக்கு காரணம் அல்கெய்டா தீவிரவாதிகள்தான் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், தீவிரவாதிகளின் அடுத்த குறி கென்யா எனக் கூறப்படுகிறது. அங்குள்ள அமெரிக்க நாட்டவர்களை கொல்லவும், கட்டடங்களை தகர்க்கவும், தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த பசல் அப்துல்லா முகமது என்பவர் மொம்பாசா துறைமுகப் பகுதிக்கு வந்திருப்பதாகவும், சதித் திட்டத்தை அவர் விரைவிலேயே நிறைவேற்றுவார் என்றும் அமெரிக்காவும், பிரிட்டனும் தெரிவித்துள்ளன. (ஒ)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

19.05.2003



### செல்வி பன்னீர்ச்செல்வம் மிதுர்ஷிகா

கேணியடி, இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த
பன்னீர்ச்செல்வம் ~ சோபிதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**மிதுர்ஷிகா**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (19.05.2003) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி மிதுர்ஷிகாவை அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள், அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

கேணியடி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

(18105) திரு.பன்னீர்ச்செல்வம்(அப்பா),
திருமதி சோபிதா(அம்மா).


## ஜெனரேட்டர்கள்

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

**650W, 1000W, 1200W, 1600W, 2600W**

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்டூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சறிகள், தோட்ட பங்களாக்கள்..........
இன்னும் பல!
உடனடி விற்பனைக்கு உண்டு.

கையிருப்பு சொற்பமே!

**GENERAL EQUIPMENTS LTD**

316, 400, Sri Sangaraja Mawatha, Colombo - 12
Tel: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(C27825)



## TELE VOICE நிறுவன சேவை



இன்று யாழ்.நகரிலும் மேசைத் தொலைபேசி
சேவையை வழங்குகின்றது!
இந்தச் சேவையை சிக்கலில்லாத
மிகத் தெளிவான முறையில் உரையாடக்
கூடியவாறு உத்தரவாதத்துடன் எப்பிரதேசத்திலும்
அமைத்துத் தருகின்றனர்.



தொடர்புகளுக்கு: 071 - 335580
0777 - 113, 663
0777 - 067, 389
071 - 340540

**ரெலி வொய்ஸ்**

இல.13, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(யாழ்.சந்தை சைக்கிள் பாதுகாப்புக்கும் R.B புக்கிங் சென்ரருக்கும் அருகில்)

(18096)


### சரசாலை ஆலய உற்சவத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டி

தென்மராட்சி,மே19

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவத்தையொட்டி சரசாலை இந்து மன்றத்தினர் பாடசாலை மாணவர்களிடையில் பேச்சுப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

ஆறு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என மன்றச் செயலாளர் க.சிவசங்கரநாதன் அறிவித்துள்ளார். (எ-117)

### 'சார்ஸ்' தடுப்பு பயிற்சி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.குடாநாட்டில் 'சார்ஸ்' நோய் தொற்றும் பட்சத்தில் அதற்கு ஏற்ற வைத்திய சிகிச்சைகள் மேற்கொள்ள உதவுமுகமாகவும் நோயாளர் பராமரிப்பு தொடர்பாகவும் பரிசாரகர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்க கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பயிற்சியினை யாழ்.போதனா வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள வசதி செய்து தருமாறு கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவுப் பணிப்பாளர், யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

இப்பயிற்சியினை வழங்க யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஒ-15)

### வேலை ஆள்கள் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் விவசாயப் பண்ணை ஒன்றிற்கு வேலை ஆள்கள், இரவுக் காவலாளிகள் தேவை. உணவுடன் தங்குமிட வசதியும் உண்டு. கிராம சேவையாளரின் நற்சான்றுப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும்.

வி.இல. 1896,
மே/பா. உதயன். (18128)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து




செல்வன் ரட்ணசங்கர் மதுரகீதன்
இணுவில் மேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி ரட்ணசங்கர் - நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### செல்வன் மதுரகீதன்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (19.05.2003) திங்கட்கிழமை இணுவிலில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, சஞ்ஜீவன், அப்பப்பா, அம் மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார், அத்தைமார், சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளாசி பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இராசரத்தினப் பத்தர் அன் சன்ஸ்,
நகைத் தொழிலகம்,
கே.கே.எஸ். வீதி, இணுவில். (18131)

இ.ரட்ணசங்கர்
(அப்பா).

### குழந்தை யேசுவுக்கு நன்றி

என்னை நீ அதிகமதிகமாக மகிமைப்படுத்தும் போதெல்லாம் உனக்கு நான் அதிகமதிகமாக ஆசிகள் அருளுவேன் என மொழிந்த யேசுவே, எங்கள் மகனுக்கு நீர் செய்த நன்மைக்காக நன்றி செலுத்துகின்றேன். நன்றி யேசுவே!

(18119) குழந்தை யேசுவின் அடியாள்.

### கீத்தனா பயிற்சி நிலையம்

கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

காலம் : இன்று (19.05.2003) திங்கட்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இடம் : கீத்தனா பயிற்சி நிலையம்,
டச் வீதி, உடுவில்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஆசிரியர் ராகினி,
மாணவர்கள்.

(சி-27980)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் செல்லையா இராஜேந்திரம்

(நல்லபிள்ளை)

அவனியில்
15-8-1945

அவனிடம்
19-04-2003



அன்புடன் எம்மைத் தூக்கி ஆசையாய் முத்தம் தந்து
சின்னச்சிரிப்புடன் சினக்காமல் எமைக் காத்த அப்பா!
அப்பா! அப்பா! என்று கதறுகின்றோம் அப்பா!!!
உங்கள் செவிதனில் கேட்கவில்லையோ அப்பா?
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் 'அப்பா' என்று ~ நாம்
அழைக்க எம் அருகில் நீங்கள் இல்லையே அப்பா!
பாசமுடன் எமை வளர்த்து ஆளாக்கிய அப்பாவே
நோயுற்ற காலத்திலும் பிள்ளைப் பாசம்தான் பெரிதென்று
நோயைத் தூசென மதித்தவர் நீங்களப்பா!
பாசம் நெஞ்சில் மோதத் தேடி ஓடி வந்த நேரம்
பாதிவழியில் தவிக்கவிட்டுச் சென்றது ஏனோ அப்பா?
நீங்கள் பாதி விழிமூடி இருக்க எம் பால்விழிகள் பார்த்துநிற்க
எம்மை ஒருமுறை பார்த்துவிட்டு பார்வைக் கண்மூடி
தனிப்பயணம் தொடர்ந்தீர்களே அப்பா!
உங்களை நினைத்து ஏங்கும் கோயில்கள் இங்கிருக்க
தெய்வமே நீங்கள் தொலை தூரம் போனது ஏனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தமும் இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த (19-04-2003) சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் **செல்லையா இராஜேந்திரம்** அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (19-05-2003) திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.





ஞானவைரவர் கோவில் ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(18129)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

உதயன்

# உறுதிமொழிகளை நிறைவேற்ற புதிதாக உறுதிமொழி

தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைக் களைவதற்கான புதிய ஆலோசனைகள், திட்டங்கள் ஆகியவற்றை அரசுத் தரப்பு புலிகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக அறிய வந்திருக்கின்றது.

வடக்கு - கிழக்கின் புனரமைப்பு மற்றும் அப்பகுதி மக்களின் புனர்வாழ்வுப் பணிகளைக் கவனிக்கவென ஸ்தாபிக்கப்பட்ட 'சிரான்' உபகுழுவுக்கு உரிய நிதி, நிர்வாக அதிகாரமோ, சட்ட அங்கீகாரமோ வழங்கப்படவில்லை என்பது புலிகளின் விசனத்துக்கான காரணங்களுள் ஒன்று.

'சிரான்' உபகுழுவுக்கு உரிய நிதி, நிர்வாக அதிகாரம் மற்றும் சட்ட அங்கீகாரம் வழங்கும் விதத்திலான சட்ட வரைவு ஒன்றையும், அந்த சட்ட வரைவை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வருவேன் என உறுதியளிக்கும் விதத்தில் பிரதமர் வழங்கும் உறுதிக் கடிதத்தின் நகலையும் அரசுத் தரப்பு இப்போது புலிகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்த வரைவு ஆவணங்களில் - தமக்குத் திருப்தி ஏற்படுத்தும் விதத்தில் - ஏதேனும் திருத்தம் செய்யப்படுவது அவசியம் எனப் புலிகள் பிரேரித்தால், அதனைச் செய்வது குறித்துப் பரிசீலிக்கத் தயார் எனவும் அரசுத்தரப்பு புலிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அறியவருகின்றது.

இந்தப் பின்னணியில் நோக்கும்போது 'சிரான்' உபகுழு தொடர்பான தற்போதைய நெருக்கடியை சற்றுக் காலத்துக்குத் தள்ளிப்போடும் நிலைமை உருவாக்கப்பட்டு வருவது தெரிகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எழுத்து மூலமும், பின்னர் ஆறு சுற்றுப் பேச்சுக்களில் கூட்டறிக்கை மற்றும் கூட்டறிவிப்புகள் மூலமும் வெளிப்படுத்தப்பட்ட இணக்கங்களை - காணப்பட்ட முடிவுகளை - வழங்கப்பட்ட உறுதிமொழிகளை - ஒப்புக்கொண்ட கடப்பாடுகளை அரசுத் தரப்பு நிறைவு செய்யவில்லை என்பதுதான் புலிகளின் குற்றச்சாட்டு; விசனம்; கவலை; அதிருப்தி எல்லாமே.

இப்போதைய நிலையில் வெளியாகியிருக்கும் தகவல்களின்படி பார்த்தால் இந்த வரிசையில் மற்றொரு உறுதிமொழியை 'சிரான்' உபகுழுவுக்கு நிதி, நிர்வாக அதிகாரங்கள் மற்றும் சட்ட அங்கீகாரம் ஆகியவற்றை விரைவில் வழங்க ஏற்பாடு செய்வேன் என்ற உறுதிமொழியை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன் கைப்பட ஒப்பமிட்டு வழங்கப் போகின்றார்.

இதே பிரதமர்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டார். இதே பிரதமரின் பிரதிநிதிகள்தாம் ஆறு சுற்றுப் பேச்சுக்களின்போது புலிகளுடன் கண்ட இணக்கங்களையும் முடிவுகளையும் கூட்டறிக்கை மற்றும் கூட்டறிவிப்புகள் மூலம் வெளியிட்டனர்.

ஆனால், அவற்றில் பல நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் புலிகள் இப்போது கிளப்பியுள்ள பிரச்சினைக்கு மூலகாரணம்.

அப்பிரச்சினைகளுக்கு - அவற்றுக்குக் காரணமாக அமைந்த அதே உறுதிமொழிகளின் வடிவத்தில் - தீர்வைத்தர முயல்வது பலன் தருமா என்பதுதான் கேள்வி.

ஏற்கனவே தந்த உறுதிமொழிகளை நிறைவேற்றாததால் எழுந்துள்ள பிரச்சினையை மற்றொரு உறுதிமொழியை நம்பி, பூதாகரமாக்காமல் கைவிடுவதா? புதிய உறுதிமொழியை நம்புவதா? - என்பதெல்லாம் புலிகளின் தலைமை தீர்மானிக்க வேண்டிய முக்கிய விடயங்களாகின்றன.

களத்தில் தற்போது காலம் நெருங்கிவரும் அடுத்த பிரச்சினை உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமானது. தற்போதைய சட்ட ஏற்பாடுகளின்படி, ஏற்கனவே இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட வடக்கு - கிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்த மாதம் 23 ஆம் திகதி எப்படியும் நடத்தியாக வேண்டும். அதுவும் ஒரு வருடத்துக்கு முன்னர் இத்தேர்தல்களுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில்.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களின்படி இத்தேர்தலைத் தள்ளி வைக்கவோ முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை நிராகரிக்கவோ இடமில்லை.

கடைசி நேரத்தில் போட்டியின்றி எந்தக் கட்சியும் இத்தேர்தல்களில் வென்றுவிடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக தமிழ்க் கட்சிகள் பல தாக்கல் செய்த 'டம்மி' வேட்பாளர் பட்டியல்களுடன் இத்தேர்தல் ஏற்பாடு இழுபடுகின்றது.

பழைய வேட்புமனுப் பட்டியல்களைத் தள்ளுபடி செய்யவும், புதிய வேட்புமனுக்களைக் கோரிப் பெற்று அவற்றின் அடிப்படையில் இந்தத் தேர்தல்களை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசுத் தரப்பில் வழமை போல உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், களத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சட்டப்படி தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்துவதற்கு இன்னும் ஒரு மாதந்தான் இருக்கின்றது. வழமை போல கடைசி நேரம் வரை இருந்துவிட்டு, தமிழர் தரப்பும் அரசுத் தரப்பும் இறுதி நேரத்தில் இழுபறிப்படும் நிலைமை இந்த விடயத்திலும் மீண்டும் வரும் போலத்தான் தெரிகின்றது.

உறுதிமொழிகளை வழங்குவதும், உரிய காலத்தில் அவற்றை நிறைவேற்றாமல் இழுத்தடித்துவிட்டு கடைசி நேரத்தில் இழுபறிப்படுவதும் எப்போதுதான் நீங்கப் போகின்றதோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

# பூதந்தேவனார் பெயரில் தமிழ்ப்புலவர் கல்லூரி

## நல்லை ஆதீன மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே19

ஈழத்துப் பூதந்தேவனார் பெயரில் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்று நிறுவப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற ஈழத்து தமிழ்ப் புலவர் மாநாட்டில் இறுதிநாள் நிகழ்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று நாள் நடைபெற்ற மேற்படி மாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ ஈழத்தமிழரின் புலமைத் திறனை நிலைபெறச் செய்தவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் புலவர்களுள் ஒருவராகிய எட்டுத்தொகை நூல்களுள் தமது பாடல்களையும் இடம்பெறச் செய்த ஈழத்துப் பூதந்தேவனார்க்கு ஆண்டுதோறும் பெருவிழா எடுத்தல்

☆ வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயசூழல் புனிதப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படவேண்டும். அத்துடன் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து வெளியேறி சமயப் பாடசாலைகளும், மடங்களும் அமைப்பதற்கு வழிவிடவேண்டும். குறிப்பாக மேற்படி ஆலயத்தில் வழிபாடு செய்த சிவபக்தனான இராவணனுக்கு சிலை நிறுவப்படவேண்டும்.

☆ ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் நூல்களை பாதுகாக்கும் பொருட்டும், ஈழத்தின் தமிழ் நூல்களின் வளத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டும் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கென தனியான நூலகம் ஒன்று நிறுவப்படவேண்டும்.

☆ இந்த நாட்டின் மூத்த முதற்குடிகளான தமிழ் மக்கள் இதுவரைகாலமும் அனுபவித்து வந்த துன்பங்கள் - அழிவுகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படுதல் வேண்டும்.

☆ பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தூய தமிழ்ப்பெயர்களைச் சூட்டி தமிழ்க்கலாசாரம் நிலைபெற உதவ வேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ)

# புலிகளைப் புரிந்துகொண்ட மக்களுக்கு சமாதானப் பேரணிகள் தேவையில்லை!

## உயர்தர மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே19

சமாதானத்தின் மீது விடுதலைப் புலிகள் கொண்டுள்ள பற்று யாழ்.மக்களுக்குத் தெரியும். அதனால் சமாதானப் பேரணிகளும் கூட்டங்களும் அவர்களுக்கு வேண்டியதில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்ப்பாணம் உயர்தர மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்திற்கும் அமைதிக்குமான புனித யாத்திரையில் தடம்பதித்து இன்னும் அவற்றின் சிகரத்தை எட்டுமளவில் மக்கள் இருக்கின்றார்கள். மக்களுக்கு உந்துசக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளும் செயற்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு செயற்பட்டு, அதன் படிகளில் ஏறிக்கொள்வதற்கான செயல்களில் தீவிரமாக ஈடுபட்டு இன்றைய சமாதானப் பேச்சுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்கின்ற அடுத்த கட்ட நிமிர்வில் மக்களை கொண்டுசென்று சேர்த்தவர்கள் விடுதலைப் புலிகள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்த நிலையில், தாய்லாந்தில் ஆரம்பமான பேச்சுகள் சீரான வழியில் போய்க் கொண்டிந்தமை யாவரும் அறிந்ததே. அவ்வாறிருக்க, திடீரென வாஷிங்ரனில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு எமது மக்களின் பிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு தராதது மக்கள் மனதில் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. - இவ்வாறு ஏமாற்றத்தை தந்தவர்களுக்கு விடுதலைப் புலிகளும் தமது வைரத்தைப் புலப்படுத்த வேண்டியது தார்மீக கடமையாகும். அதனால் அவர்கள் பேச்சுகளுக்குச் சமுகமளிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

இங்ஙனம் விடுதலைப் புலிகள் அறிவித்தமையைத் தொடர்ந்து தன்னம்பிக்கை இழந்த சிலரிடையே திரிபுடைய எண்ணங்கள் தோன்றியுள்ளன. அதாவது விடுதலைப் புலிகளுக்கு சமாதானத்தின் மீது விருப்பமில்லை. புலிகள் என்றால் அவர்கள் ஏதோ போர்மதம் கொண்டு விளங்குகிறார்கள் என்பன போன்ற மன வெளிப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த வெளிப்பாடுகளின் விளைவே இவர்களின் சமாதானப் பேரணிகளும், சமாதானக் கூட்டங்களும், சமாதான ஊர்வலங்களுமாகும். புத்திஜீவிகள் நிறைந்த யாழ்.மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியலும், ராஜதந்திரமும், சமாதானத்தின் பால் அவர்கள் கொண்டுள்ள விருப்பும், தமிழீழ மக்களின் நிம்மதியான வாழ்வின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றும், பாசமும் புரிந்திருக்க முடியாது. அவ்வளவிற்கு யாழ்ப்பாண மக்கள் வெறும் மரமண்டைகள் அல்லர். அவர்களுக்கு மூவின பேரணிகள், ஈரின பேரணிகள் எனப் பாகுபாடு கூறும் பேரணிகள் வேண்டியவையல்ல. சாமதானம் என்கின்ற பொக்கிஷத்தைப் பெறுவதற்காகத்தான் கணக்கற்ற உயிர்விலைகள் கொடுக்கப்பட்டன. பொருளாதாரங்கள் இழக்கப்பட்டன. பாரியளவிலான பெறுமதி காணமுடியாதளவிற்கு இரத்தங்கள் சிந்தப்பட்டன.

இவையாவும் இந்த மக்களால் தான் நிறைவேற்றப்பட்டன. இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளமுடியாதவர்களாய் புதிது புதிதாக நேற்றுப்பெய்த மழைக்கு முளைக்கும் காளான்களாய் இச்சமாதான ஊர்வலங்கள், பேரணிகள் பவனி வருவது இக்காலத்திற்கு தேவையில்லாத ஒன்றே என்று கூறலாம்.

எனவே, ஒட்டு மொத்த மக்களின் எழுச்சியில் உருவான சமாதானத்திற்கான சூழல் ஆரோக்கியமாக இருப்பதற்கு ஒன்றுபட்டு உழைப்போம். குழப்பம் விளைவிப்பவரை அகற்ற வழிதேடுவோம். (ஓ)

# கைதடி, நுணாவில் பகுதியில் சட்டவிரோத கள் விற்பனை

கைதடி, நுணாவில் பகுதியில் உள்ள சில வீடுகளில் சட்டவிரோதமாக கள் விற்கப்படுவதாக கூறப்படுகிறது. இங்கு கள் அருந்தி விட்டு போதையில் செல்பவர்களால் அப்பகுதியில் வசிப்பவர்கள் பல இன்னல்களையும், சிரமங்களையும் அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சட்டவிரோத கள் விற்பனையை நிறுத்துவதற்கான செயற்பாடுகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ளாதுள்ளதாகவும் -

இத்தகைய போக்கு மிகவும் கவலையளிப்பதாகவும் -

இப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விற்பனையை மேற்கொள்வோரின் வாடிக்கையாளர்களாக சீருடையினரும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-75)

## மின்விநியோகத்தில்

# கைதடியின் சில பகுதிகள் புறக்கணிப்பு எனப் புகார்

கைதடி,மே19

கைதடிப் பிரதேசத்துக்கான மின்விநியோக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலபகுதிகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

கைதடி மத்தி வளர்மதி வீதி, கைதடி கலைநகர், கைதடி இராஜபுரி ஆகிய பகுதிகளே இவ்வாறு புறக்கணிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

கைதடியின் ஏனைய பகுதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டு கேபிள்களை இணைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மின்விநியோகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள சில பகுதிகள் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் மின்சார வசதியைப் பெற்றிருந்தன என்றும் கூறப்பட்டது. (எ-75)

## நாளை

வைகாசி 06
செவ்வாய்க் கிழமை
20.05.2003
திதி : பஞ்சமி
பின்னிரவு 12.27 வரை
நட்சத்திரம் : பூராடம்
முற்பகல் : 8.55 வரை
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 - 4.21
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

பிறரை ஏமாற்றி வாழ்பவர்கள் தாமே ஏமாற்றப்படும் போது அதிக பாதிப்பை அடைகிறார்கள்.

# மணல் அகழ்வு விதிகளை வகுப்பதில் மெத்தனம்!

## பி.செயலகம் மீது மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம்,மே19

அரியாலைப் பகுதியில் மணல் அகழ்வது தொடர்பான விதிமுறைகளை வகுப்பதில் நல்லூர் பிரதேச செயலகம் மெத்தனம் காட்டுவதாகக் கூறப்படுகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகத்தில் நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதியில் திருட்டுத்தனமாக மணல் அகழ்வதைத் தடுக்கவும், மணலுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்கவும், மணல் அகழ்வு குறித்த விதிமுறைகளை வகுப்பது என அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சுமார் பத்து நாள்கள் கடந்துவிட்ட நிலையிலும், இது வரை அத்தகைய விதிமுறைகள் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் திருட்டுத்தனமாக மணல் அகழ்வது அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# வறிய மாணவரின் கல்வி தரத்தை மேம்படுத்த உதவி

## கிராமிய உழைப்பாளர் சங்கம் திட்டம்

கிராமப்புறங்களிலுள்ள வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான இலவச கல்வித் திட்டம் ஒன்றினை யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் முன்னெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக குப்பிளான் தெற்கு அறிவொளி சன சமூக நிலையம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை கலைவாணி சன சமூக நிலையம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு கம்பம்புலம் பாரதி சன சமூக நிலையம் ஆகியவற்றில் மாலை நேர இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் -

மேலும் பல வறிய கிராமங்களில் இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் -

கிராமிய உழைப்பாளர் சங்க பொதுச் செயலாளர் என்.இன்பம் தெரிவித்தார். (எ-4)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாத்தியங்கள் திருத்துதல்

கீழ்வரும் வாத்தியங்களைத் திருத்துவதற்கு தகுதிவாய்ந்த வாத்தியத் திருத்துநரிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுருதிப்பெட்டி | - | 13 |
| 2. | ஆர்மோனியம் | - | 01 |
| 3. | மிருதங்கம் | - | 13 |
| 4. | வீனா | - | 05 |

மேற்படி வாத்தியங்களை திருத்த விரும்புவோர் மருதனார் மடத்தில் உள்ள எமது நுண்கலை இசைத்துறைத் தலைவரைச் சந்தித்துப் பார்வையிட முடியும். கூறுவிலைகள் 26.05.2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வாத்தியங்கள் திருத்துதல்" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர். (சி-27917)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 - 05 - 1925



மறைவு 19 - 04 - 2003

### அமரர் அம்பலவாணர் பொன்னுத்துரை

(மாணிக்கம் - வேலணை அம்மன் கோயிலடி)

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
கண் இமைபோல் எம்மை
எல்லாம் காத்துவந்த ஐயா!
நீங்கள் எம்மை எல்லாம்
விட்டுச் சென்றாலும் உங்கள்
நினைவு என்றும் எங்கள்
உள்ளத்தில் நிலைத்து நிற்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பெருங்குளத்து அம்மையைப் பிரார்த்திக்கின்றோம்.

(18013)

இல.241 G,
சரிதா நகையகம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 08 - 1952



மறைவு 22 - 05 - 2000

### திருமதி புனிதவதி கதிர்காமநாதன்
திதி: 19-05-2003

அம்மாவிற்காக.......
அன்பிற்கும் நிகருண்டோ.
அந்த அன்பைச் சொரிகின்றவள் தாய்
யாரென்று அறியாத பருவத்திலே
தாயென்றும் பாராமல்
போனனையோ.
யாரென்றும் அறியாமல்
உன்னைத் தாயென்று
நான் அழைப்பதுதான் எப்போது?
உணவூட்டி வளர வைத்தாய்.
உணர்வூட்டி வாழ வைத்தாயே
தாலாட்டி உறங்க வைத்தாய்
எனைவிட்டு ஏன் பிரிந்தாய்?
உண்ணவென்று உணவை
எடுத்தேன் - அம்மா
அதில் உன் முகம் தெரியுதம்மா
உறங்கவென்று பாய் போட்டேன்
- அம்மா
அங்கு தாலாட்டு இல்லையம்மா!
நோயென்று நான் படுக்க
உன் தூக்கம் நீயிழந்து
தலம் தலமாக நீ சென்று
எனது நோயகற்றப் பாடுபட்டாய்.
அன்னையே நீயின்றி
அர்ப்பரிக்கும் என்மனது - உன்
ஆத்மா சாந்திக்காக.
ஆண்டவனை வேண்டுகிறேன்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (17994)

## பாடசாலையை மீள இயக்க நிதியின்றி சிரமம்

தென்மராட்சி,மே19

பளை அல்லிப்பளை அரசினர் பாடசாலையை மீள இயங்க வைக்க பாடசாலைச் சமூகம் மேற்கொண்ட முயற்சிகள் நிதிவசதி இன்மையால் கைவிடப்படக்கூடிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அல்லிப்பளைப் பகுதியில் கிளாலிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் குடியமர்ந்துள்ளனர். இப்பாடசாலையை இயங்க வைக்க அவர்கள் பாடசாலைக் காணியைத் துப்புரவு செய்தபோதிலும் இதுவரை தற்காலிக வகுப்பறை அமைப்பதற்குக் கூட நிதி உதவி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரிப் பகுதியில் மூடப்பட்டிருந்த பல பாடசாலைகளை மீள இயக்குவதற்கு அரச அதிபர் நிதி உதவி வழங்கியது போல அல்லிப்பளைப் பாடசாலையையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நிதி உதவி கோரியுள்ளதாக மேற்படி மக்கள் தெரிவித்தனர். (ஓ-117)

## புதிய மின்மாற்றிகள்

சண்டிலிப்பாய்,மே19

சண்டிலிப்பாய், தொட்டிலடிச் சந்திக்கு அருகிலும், பிரான்பற்று - பெரியவிளான் சந்திக்கு அருகிலும் இலங்கை மின்சார சபையினரால் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. இதேவேளை - பனிப்புலம் இடும்பன் ஆலயத்திற்கு சமீபமாகவும் புதிய மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் கிராமிய மின் விநியோகத் திட்டத்தின்கீழ் மேலும் சில இடங்களில் புதிய மின்மாற்றிகள் நிறுவப்படவுள்ளதாகவும் இம்மாத இறுதியில் யாழ்மாவட்டத்திற்கு விஜயஞ் செய்யவிருக்கும் மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரியா இம்மின்மாற்றிகளின் பணியை ஆரம்பித்து வைப்பாரெனவும் இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-135)

## டீசல் கொள்கலன் கொள்வனவு

தென்மராட்சி,மே19

கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் விரைவில் 'பம்ப்' மூலம் டீசல் விநியோகிக்கப்படவுள்ளது.

டீசலைக் களஞ்சியப்படுத்துவதற்கான நிலத்தடிக் கொள்கலன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் - அது பொருத்தப்பட்டதும் வாகனங்களுக்கு 'மீற்றர் பம்ப்' மூலம் டீசல் விநியோகிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இங்கு பரல்களில் வைத்தே வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

## சமுர்த்தி அதிகாரிகளுக்கு குருநாகலில் பயிற்சி

சாவகச்சேரி,மே19

பிரதேச செயலகங்களில் பணிபுரியும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்களுக்கு சமுர்த்தி அதிகாரசபை அடிப்படைப் பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றது.

இப்பயிற்சி நெறி குருநாகல் பிரதேசத்தில் வாரியப்பொலவில் நடைபெற்று வருகின்றது.

இச் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கட்டம் கட்டமாக அழைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி நெறி சிங்களமொழியில் கற்பிக்கப்படுவதாகவும் ஆனால் அவை தமிழ்மொழியில் உடனடியாக மொழி பெயர்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒன்பதாம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை தென்மராட்சி மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 80 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-31)


### விற்பனையாளர்கள் தேவை

த.குமாரசாமி அன் சன்ஸ்
கண்ணாடிக்கடைக்கு
விற்பனையாளர்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்)

த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (18017)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்களை வழங்குவதற்கு தகுதியுடைய வர்த்தகர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. பிணைச்சல், பூட்டு, திறாங்கு, யன்னல் கொழுக்கி போன்றவை.
2. நீர்குழாய்கள், நீர்க்குழாய் இணைப்புக்கள், வால்வுகள் மற்றும் ஏனைய நீர்க்குழாய்ப் பொருள்கள்.
3. ஒட்டுப் பலகைகள், கதவுகள்.
4. செரமிக் உபகரணங்கள்
5. தீந்தைகள், வானிஸ் பிறஸ்கள்.
6. மின்சாரப் பொருள்கள்.
7. மணல், கல்லு, செம்மண்.
8. மரத்தீராந்திகள், பலகைகள்.

கேள்விப் பத்திரப்படிவங்களை மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 500/=ஐ காசாக யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் (அல்லது யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை கணக்கு இல. 90501) செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 20.05.2003 தொடக்கம் 22.05.2003 வரை பல்கலைக்கழக நிதிப்பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 26.05.2003ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கட்டடப் பொருள்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 26.05.2003 அன்று பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (சி-27969)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 25 - 03 - 1930



உதிர்வு 30 - 05 - 2002

### அமரர் செல்லப்பெருமாள் சிவராசபிள்ளை

(இளைப்பாறிய மாவட்ட கடற்றொழில் அதிகாரி, யாழ்ப்பாணம்)

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
எங்களை வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கனடா. (C/27933)

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

உயிர்ப்பு 16 - 06 - 1919



உதிர்வு 19 - 05 - 2000

### முருகேசு முத்தையா

அன்பின் ஊற்றாய்
நம்பிக்கையின் முழு உருவமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
நிமிர்ந்து நின்றீர்களே!
எங்கே சென்றீர்கள்?
இயற்கையுடன் இணைந்து
வருடங்கள் மூன்று கடந்தனவோ?
நம்பமுடியவில்லையே ஐயா!

141பி, கடற்கரைச் வீதி,
திருகோணமலை. (18064)

ஸ்ராலின் குடும்பத்தினர்.

# உயர்தரப் பாடத் துறைத் தெரிவு விடயத்தில் மாணவருக்கு கல்விச் சமூகம் வழிகாட்டுமா?

இலங்கைப் பாடசாலைக் கல்வி முறையின்படி ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை, ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை ஆகிய பொதுப் பரீட்சைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்ததே.

இவை பொதுப்பரீட்சைகளாக மட்டுமன்றி போட்டிப் பரீட்சைகளாகவே நடத்தப்படுகின்றன. இவற்றிலும் குறிப்பாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதி ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் அனுமதி, வேலைவாய்ப்புக்கள் போன்றன வழங்கப்படுவதன் காரணமாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையானது ஒரு மாணவனின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் மிகக் கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது.

அத்துடன், ஜி.சீ.ஈ. சாதாரண தரப பரீட்சையில் மிகவும் திறமையாக சித்தியடைந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றுடன் சித்தியடைவது பொது வழமை.

ஆனால், தற்காலத்தில் குறிப்பிட்ட ஒரு மாணவனின் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரபரீட்சைகளின் பெறுபேறுகளிற்கிடையில் நீண்டதோர் இடைவெளி காணப்படுகின்றமையை அண்மைக் காலப் பரீட்சை முடிவுகள் வெளிக்காட்டுகின்றன.

சு.சிவநேசராசன்
ஆசிரியர்,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

அதாவது, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களில் பெரும்பான்மையோர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் நன்கு பிரகாசிக்காது மங்கிவிடுகின்றனர் அல்லது மறைக்கப்பட்டுவிடுகின்றனர். இந்நிலை ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஆசிரியர் சேவையானது அர்ப்பணிப்புமிக்க சேவை என்ற உயர் கௌரவமான தனித்துவ நிலையில் இருந்து கீழிறங்கி வர்த்தக சேவையாக மாறிக் கொண்டு வருகின்றமை.

2. மாணவர்களிடம் இயற்கையாகவே உள்ள தேடல் திறன், ஆராய்வூக்கம், விடாமுயற்சி, சுயசிந்தனை ஆகிய சிறப்பு இயல்புகள் பல்வேறு காரணிகளினால் மழுங்கடிக்கப்படுகின்றமை.

3. பாடசாலைகளுக்கிடையே பௌதிகவளம், ஆளணிவளம் போன்றவற்றின் பகிர்வு விடயங்களில் தேசியப் பாடசாலைகள், நகரப் பாடசாலைகள், கிராமப்புறப் பாடசாலைகள் என்ற பாரபட்சமான நிலைகள் காலங் காலமாகப் பேணப்பட்டு வருகின்றமை.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறு வீழ்ச்சி அடைவதற்கான மேற்படி பிரதான காரணங்களில் கூடுதலான உண்மை இருந்தபோதிலும் பொருத்தமற்ற பாடத் துறைத் தெரிவும் உயர்தரப் பெறுபேறு வீழ்ச்சி அடைவதற்கு கணிசமான பங்கையாற்றுகிறது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

'பாதை தவறிய கால்கள் விரும்பிய ஊர் சென்று சேர்வதில்லை.' பொருத்தமற்ற பாடத்துறையைத் தெரிவுசெய்த மாணவனும் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் பிரகாசிப்பதில்லை.

பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்ற பிரயாணி ஒருவன் தான் போக வேண்



டிய இடத்துக்கு தன்னைக் கொண்டு செல்லக்கூடிய பஸ்ஸிலேயே ஏற வேண்டும். இதைவிடுத்துப் பொருத்தமற்ற பஸ்ஸில் ஏறினால் நடுவழியில் இறங்கிப் போகின்ற பாதை தெரியாது அலையவேண்டி ஏற்படும்.

### பாடத்துறைத் தெரிவு

புதிதாக ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் படிக்கப்போகின்ற மாணவன் ஒருவனுக்குப் பொருத்தமான பாடத் துறைத் தெரிவானது ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள், மாணவனின் சுயவிருப்பம் போன்ற காரணிகளினால் மட்டும் தீர்மானிக்கப்படுவது கூடுதலான நன்மையை ஏற்படுத்தாது. கீழ் வகுப்புக்களில் குறிப்பிட்ட மாணவனுக்குக் கற்பித்த பல்துறை சார் ஆசிரியர்கள், ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கின்ற பல்துறைசார் நிபுணர்களான ஆசிரியர்கள் போன்றோர்களின் ஆலோசனைகளையும் பெற்று பாடத் துறை தெரிவுசெய்யப்படும் போதே அத்தெரிவானது முழுமை பெறுகின்றது என்பதை கல்விச் சமூகம் நன்கு அறியும். அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முன்பு குறிப்பிட்ட பாடத் துறை தொடர்பான பூரண விளக்கம் மாணவர்களுக்குத் துறைசார் நிபுணர்களினால் கருத்தரங்குகள் மூலம் வழங்கப்பட்ட பின்பே பாடத் துறைத்தெரிவு இடம்பெற்று ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கும் வழமை தற்போதும் பெரும்பாலான தென்னிலங்கைப் பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது.

ஆனால், குறிப்பிட்ட விடயம் தொடர்பாக எமது யாழ்.குடா நாட்டுக் கல்விச் சமூகத்தில் இன்று நடப்பது என்ன?

### தனியார் கல்வி நிறுவனங்கள்

பருத்தித்துறை வீதியில் சில தனியார் மினி பஸ்கள் 'சுப்பசொனிக் வேகத்தில் சென்று போட்டி போட்டுக் கொண்டு பிரயாணிகளை ஏற்றுவது போன்று எமது குடா நாட்டில் இயங்கும் சில தனியார் கல்வி நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு விளம்பரங்கள் செய்து புதிய உயர்தரப் பிரிவுகளில் கூடுதலான மாணவர்களை சேர்ப்பதற்காக மிக விரைவாக ஜி.சீ.ஈ. உயர்தர புதிய பிரிவு வகுப்புக்களை ஆரம்பித்து விடுகின்றனர்.

அதாவது ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவதற்கு முன்பே குறிப்பிட்ட மாணவர்களுக்கு உயர்தர வகுப்புக்களை சில தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்து விடுகின்றன. குறிப்பிட்ட பாடத்துறை தொடர்பான பூரண விளக்கம் எதுவும் மாணவர்களுக்கு வழங்கப்படாது பாடத்திட்டத்தினுள் மாணவர்கள் நேரடியாக பலவந்தமாக இறக்கப்படுகின்றனர். பாடத்திட்டத்தை விரைவாகப் பூர்த்திசெய்யவேண்டும் என்ற நல்ல நோக்கமே இதற்கான பிரதான காரணம் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், நீந்திப் பழக விரும்பும் ஒரு மனிதனுக்கு விரைவாகக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் நீந்துதல் தொடர்பான அடிப்படைப் பயிற்சிகள் எதுவும் வழங்காது உடனடியாகக் குளத்து நீரில் மூழ்கடிப்பது ஆபத்தான விளைவுகளையே தொலைதூரநோக்கில் உருவாக்கும் என்பதை எமது யாழ்.கல்விச் சமூகம் மறந்துவிடுவது மிகவும் கவலைக்குரிய விடயமே.

### பாடசாலைகள்

எமது குடாநாட்டுப் பாடசாலைகளிலும் பாடத்துறைத் தெரிவு தொடர்பான வழிகாட்டுதல்களும், ஆலோசனைகளும் மாணவர்களுக்குப் பூரணமாக வழங்கப்படாத நிலையிலேயே உயர்தரப் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

அத்துடன் விவசாய விஞ்ஞானம், அரசியல் மூலதத்துவங்கள் போன்ற மிக முக்கியமான சில பாடங்கள் எமது பாடசாலைகளை விட்டு வெகுதூரம் சென்று மறைந்துவிட்டன.

குறிப்பாக 'யாழ்ப்பாணத்து அரசியல்' இன்று உலக அரங்கிலேயே மிக முக்கியமாக பேசப்படுகின்ற போதிலும் எமது குடாநாட்டுப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 'அரசியல்' என்ற பாடம் கற்பிக்கப்படுவது மிக மிகக் குறைவு என்பதையும் நாம் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

### ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி 'பாடசாலைகளில் மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும்' என்ற அமைப்பு எல்லாப் பாடசாலைகளிலும் முழுமையாக இயங்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட போதிலும் எமது குடாநாட்டு பாடசாலைகளில் குறிப்பிட்ட துறையானது வளர்ச்சி அடையாது இன்றும் ஆரம்பப் படிநிலையிலே காணப்படுகிறது.

ஆகவே, எதிர்காலத்திலாவது எமது பாடசாலைகளில் 'மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும்' என்ற அமைப்பு சிறப்பாக இயங்கி ஏனைய துறைகளைப் போன்றே உயர்தரப் பாடத் துறைத் தெரிவு விடயத்தில் மாணவர்களுக்கு கல்விச் சமூகம் வழிகாட்டுமா? ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பழைய மாணவர் வைத்திய கலாநிதி எஸ்.ஏரம்பமூர்த்தி, கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் என்.எஸ்.சண்முகநாதன், அதிபர் வி.மாணிக்கம் ஆகியோர் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-30)




திருநெறிக்கழகம் கிளிநொச்சி மாவட்ட உயர்தர மாணவர்களிடையே நடத்திய சைவ நெறிப் போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவிகளைப் படத்தில் காணலாம்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரெத்தினம், பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தம் மற்றும் மகாதேவா ஆச்சிரம சுவாமிகள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வேணுகோபால் உரை நிகழ்த்துவதையும் சிறப்புவிருந்தினரான தொழிலதிபர் பேரம்பலம் நாகரத்தினம் மாணவன் ஒருவனுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை படத்தில் காணப்படுகின்றார். (எ-73)



கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் நிபந்திரி அமைப்பினால் நல்லூர் சிவன் கோவிலில் வைத்து அண்மையில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த சந்தான குமாரசர்மா சக்தி பாலனுக்கு 'வித்யா சர்வத்ர பூஷணம்' என்ற பட்டத்தை காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் நினைவாக அவரது புத்திரனால் வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (எ-152)

## கிராமப்புறப் பாடசாலைகளில்
# கணனி, ஆங்கிலக் கல்வி குறித்து உரிய நடவடிக்கைகள் தேவை
### காரைநகர் உதவி அரச அதிபர் தெரிவிப்பு

காரைநகர்,மே19

கிராமப்புறப் பாடசாலைகளில் கணனி, ஆங்கிலக் கல்வி தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார். காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஸ்தாபகர் தினமும், பரிசளிப்புவிழாவும் கடந்த வெள்ளியன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உதவி அரச அதிபர் தமது உரையில்:-

கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு, கணனி அறிவு என்பன மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இத்தகைய மாணவர்களின் ஆங்கில அறிவினை விருத்தி செய்வதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் பெற்றோரும் இணைந்து அக்கறை காட்ட வேண்டும் - என்றார்.

ஸ்தாபகர் நினைவு உரை நிகழ்த்திய காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் த.சிவகுமாரன் தமதுரையில்:-

இந்துக்கள்தான் ஆசிரியர் தினத்தை முதன்முதலில் தொடக்கி வைத்தார்கள். ஆடி மாதத்தில் வருகின்ற பௌர்ணமியை குருபூர்ணிமா என அழைத்தனர். அதனை குருவாக வணங்கினர்.

இவ்வாறு இந்துக்கள் ஆடி மாதப் பௌர்ணமியை குருவுக்காக ஒதுக்கி வழிபாடு செய்தனர். அதேபோன்று உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 6ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்துக்களின் குரு தட்சணாமூர்த்தி. குருவுக்கு நன்றி செலுத்தும் பாரம்பரியத்திற்கு சொந்தக்காரர் இந்துக்கள் - என்றார்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(எ-73)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள தொடர் இல.57, உடைய Model Vanette Nissan Van விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.21, கலைப் புலவர் வீதி (பெருமாள் கோயில் முன்பக்கம்), யாழ்ப்பாணம்.(18106)

கறுப்பு நிற பொமேரியன் நாய்களும், குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி.(18136)

வைசில் மொடல் Yamaha 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.பத்மநாத சர்மா, நாறி மடத்தடி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். காலை 9.00 முதல் 12 மணிவரை பார்வையிடலாம். (18135)

### நாடகம்

வானொலியில் "இடம்பெயர்வு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி?, 2. யாழ்ப்பாணமா? கொழும்பா?, 3. எங்கள் நாடு, 4. இலக்கிய விமர்சனம். (18093)

### மணமகன் தேவை

19[illegible] ஆம் ஆண்டு, மகம் 4ஆம் பாதம் லக்கினத்தில் செவ்வாயுள்ள யாழ்.இந்து கௌரவ பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தேவை தொடர்பு:- வி.இல. 1897 மே/பா உதயன். (18130)

### தவறிவிட்டது

நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவராசா ஆனந்தசுரபி என்பவரின் தே.அ.அ (இல.756811185V) யாழ். பஸ் நிலையத்தில் 12.05.2003 திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூங்கனிச் சோலை முடம்ாவடி, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (18083)

எனது வி.அ.அ. மற்றும் ஆவணங்களும் யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வி.இராசலிங்கம் நீதிமன்ற வீதி, மல்லாகம் (விசாகப்பெருமாள் - இராசலிங்கம் 343, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18125)

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி


சர்வதேச அங்கீகாரம் பெற்ற 'லுமும்பா' போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழியில் மருத்துவக் கல்வி கற்க அனுமதி பெற்றுத்தரப்படும். உடன் சந்திக்கவும்.

*காலை*
மூத்த விநாயகர் கோவிலடி
ஆனைக்கோட்டை. (18066)

Dr.க.சிவனடியான்
*மாலை*
யாழ்.வீதி, மானிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### *ஆத்ம சாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்*

மலர்வு 26 - 03 - 1934



உதிர்வு 21 - 04 - 2003

### அமரர் நடராசா கந்தையாபிள்ளை

அன்பு முகங்காட்டி ஆதரவு மொழி பேசி
இன் சொல்லால் எம்மை மகிழ்வித்த ஐயாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாளை (20.05.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் 21.05.2003 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின்போது பல்வேறு வழிகளிலும் உதவியவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*145, சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.* (18137) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்
பணிமனையின் சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்


### திருமதி திலகராஜா ஜெகத்ஜெனனி

அவர்களின் திடீர்மறைவு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கின்றது. அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*உ.அ.அ பணிமனை,*
*மருதங்கேணி.*
(c/27983)

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சக மாணவி செல்வி தக்ஷி
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

### செல்லையா இராசேந்திரம்

அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். அவர்களது 31ஆவது நினைவு நாளில் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(18104) 2004 உயர்தர மாணவர்கள்.

## தொலைபேசி பாவனையாளர்களுக்கு

சகல தொலைபேசி பாவனையாளர்களும் தத்தமது தொலைபேசிகளில் இருந்து வெளிநாடுகளுக்கான அழைப்பினை மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்காள்ள எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட CHA - CALLING CARD விற்பனையாகின்றது.

| | Rs. | Time | |
|---|---|---|---|
| 1. | 300/= | 38 நிமிடம் | சகல ஐரோப்பிய நாடுகளுக்கும் |
| 2. | 500/= | 63 ,, | |
| 3. | 1000/= | 125 ,, | |

கிடைக்கும் இடங்கள்:-

WINTO COMMUNICATION
NO.6, 1ST FLOOR,
NEW MARKET, JAFFNA.
021-222 3806

2. RAJAN COMMUNICATION
MAIN STREET,
POINT PEDRO (பருத்தித்துறை)
021-2263028
2263281

*விற்பனை முகவர்கள் தேவை*
*மேலதிக தொடர்புகளுக்கு : 0777-631865*

❖ கணனி மூலம் வெளிநாட்டு அழைப்பைப் பெறுபவர்களுக்கான,
1. Net Phone Card - 83/= $GO_2$ CALL - 90/- (முதல் 65 இலவசம்)
2. நவீன உபகரணங்கள் என்பன எம்மிடம் உண்டு.

அனைத்து தொடர்புகளுக்கும்:
**CITY COM**
**No. 32A/1, 1st Floor,**
**Dam St., Co-12.** (18134)

T.P. 01-466676, 431643
Hot Line - 0777-365452
- 0777-311078

## 31ஆம் நாள் ஞாபகார்த்த அஞ்சலி



### திருமதி
### சரஸ்வதி இராசையா

பிறப்பு 21~07~1946

இறப்பு 19~04~2003

ஞாலத்தில் நீங்கள் வாழ்ந்து
விட்டுச் சென்ற நற் பண்புகளைத்
தொட்டுச் செல்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நாகதம்பிரான் வீதி,*
*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*
*நுணாவில்,சாவகச்சேரி,*
*(சொந்த முகவரி)* (18139)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### வைரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி வைரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா நேற்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் கந்தையா, கனகம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசரத்தினம், இராசமணி, புஸ்பலீலாவதி, அரியராசா (லண்டன் - ஓய்வுபெற்ற முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்), செல்வராசா (உதவி அரசாங்க அதிபர், சண்டிலிப்பாய்), மகேஸ்வரன் (சுவிஸ்), சிவயோகமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம், சண்முகநாதன் மற்றும் தெட்சணாமூர்த்தி (முதலியார் மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்), பொன்மணி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, கௌசலாதேவி, பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவகுமாரன் (ஆசிரியர், பரஞ்சோதி வித்தியாலயம், கோண்டாவில்) காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் செல்வக்குமார் (ஜேர்மனி) குகதாசன் (கனடா), கண்ணதாசன் (ஆஸ்திரேலியா), சங்கரதாசன் (ஆஸ்திரேலியா), சண்முகதாசன் (நியூசிலாந்து), சத்தியவரதன் (சுவிஸ்), சத்தியச்செல்வி அருள்வரதன் (சத்தியன்), ஜெயந்தன் (லண்டன்) நிரஞ்சலா (கனடா) துஷ்யந்தி செந்தூர் (மாணவர் சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜெனனி (சுவிஸ்), நளாயினி, சோமரஞ்சனி (ஜேர்மனி), பிரேமராணி (கனடா), திருமதி கண்ணதாசன் (ஆஸ்திரேலியா), ரோகினி, சர்மளா, அரசி (சுவிஸ்), ரவீந்திரநாதன், விஜயலட்சுமி, ஆனந்தராசா (கனடா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெயராம், கர்ஜன், அரிகரன், கோகுலராம், செல்வன்யா (ஜேர்மனி), ஆரவி, குகப்பிரியன், பிரணவி (கனடா), ரஜீதரன், ரஜீவன், ரஜிப்பிரியன், கஸ்தூரி (சுவிஸ்), கஜன்ராஜ், அச்சுவினியா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (19.05.2003) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(18134)

தகவல்:
ச.செல்வராசா (மகன்),
த.சிவகுமாரன்
(ராசு - பேரன்).

### கந்தசாமி பாலேந்திரன்
### (பாலு)

*(முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்)*

நெல்லியடி, பொன் கந்தையா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலேந்திரன் நேற்று(18.05.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பாறுவதம் ஆகியோரின் அன்பு மகனும் செட்டியவூர் தொண்டமானாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு - வள்ளி நாச்சியார் ஆகியோரின் மகளான சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் மயூரன் (ஹொலந்து), மஞ்சுளா, மயூரிக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற எழுத்தாளரான நெல்லை க.பேரன் மற்றும் சிவசுப்பிரமணியம்(கொழும்பு), அருளம்பலம்(கனடா) இராசலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரனும் இராசரத்தினம், குணரத்தினம் (செங்கலடி), தெய்வபுலேந்திரா (தொழில் நுட்ப உத்தியோகத்தர் A.C.L.G Office, யாழ்ப்பாணம்), செல்வராஜா(ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.05.2003 (திங்கள்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு பி.ப.2.00மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தி.செல்வராஜா (மைத்துனர்)
*ஆசிரியர். ஹாட்லிக் கல்லூரி.*
*பருத்தித்துறை.*

*முருகன் கோவில் வீதி,*
*நெல்லியடி.* (C27981)

# சிந்துவெளி முதல்... கந்தரோடை வரை...!

3 தற்போதைய கந்தரோடை என அழைக்கப்படும் பகுதி சுன்னாகத்திலிருந்து ஏறத்தாழ இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. கந்தரோடையின் கிழக்கே சுன்னாகம், வடக்கில் அளவெட்டி, மேற்கு - தென்மேற்கில் சண்டிலிப்பாய், தெற்கில் உடுவில் ஆகியன

கட்டட அழிபாடு - செங்கட்டி



எல்லையாக அமைந்துள்ளன.

கந்தரோடையில் முதன்முதல் போல் இ.பீரிஸ் என்ற தொல்லியலாளர் பரீட்சார்த்த முறையில் 1917 முதல் 1919 வரை அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டார். 1970 இல் பெரேற்ப் ரென்சன், விமலாபெக்லி ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய்வின் மூலம் கந்தரோடை கிறிஸ்தாபத்திற்கு முற்பட்ட கால வரலாற்றினைக் கொண்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

அமெரிக்கப் பல்கலைக்கழக

சாணைக்கல் அம்மியும் குழவியும்



தொல்லியலாய்வாளர்களின் கணிப்பின்படி கந்தரோடையின் வரலாற்று ஆரம்பம் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டது என்பதாகும். அதாவது கி.மு 1000 ஆம் ஆண்டில் இருந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய வளர்ச்சி நிலைகள் இங்கு ஏற்பட்டிருந்தது என்பதாகும்.

கிறிஸ்து சகாப்தமளவில் நிலைபெற்று கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை கந்தரோடையில் காணப்பட்டதாகக் கருதப்படும் முதலாவது யாழ்ப்பாணத்து அரசு கதிரமலை அரசாகும்.

இன்று வற்றிப் போய் புழுதி சொரியும் வழுக்கை ஆற்றின் தீரங்களில் தொடங்கி ஒரு புறம் வல்லிபுரம் கடல் வரைக்கும் இன்னொரு புறம் கல்லுண்டாய்வெளி வரைக்கும் பரவி நிலவியதாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தின் முதல் அரசு சிந்துவின் மக்கள் வழித்தோன்றலால் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

சிந்துவின் தஸ்யுக்களை, இந்தியாவின் முதல் மூத்த நாகரிகத்தை கி.மு. 1500 அளவில் ஆரியர் தாக்கி அழித்தனர். இந்தத் தகவலை இந்தியாவின் மிக மூத்த இலக்கியமான கி.மு. 800 ஐச் சேர்ந்த ரிக்வேதம் தருகிறது.

ரிக்வேத சுலோகங்களில் தஸ்யுக்களை இந்திரன் வென்றது, தஸ்யுக்களின் நகரத்தை எரித்ததுடன் பாசன மதகுகளை உடைத்து நதிகளை விடுவித்தது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிந்துவின் மக்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். சிந்துவின் மாடங்கள் எரியூட்டப்பட்டன. வெட்டுக்காயங்களுடன் மிஞ்சியவர்கள் தப்பிச் சென்றார்கள்.

விந்திய சற்புத்திர மலைகளைத் தாண்டி தென்னிந்தியாவுக்கும் நீரிணையைத் தாண்டி இலங்கைத் தீவுக்கும் அவர்களின் வழித் தோன்றல்கள் சிதறிப் பரவிச் சென்று குடியேறியிருக்கலாம் என்று கலாநிதி பொ.ரகுபதி, மு.திருநாவுக்கரசு, செ. கிருஷ்ணராஜா போன்ற ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

கந்தரோடையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் பயனாக நாம் பல பெறுபேறுகளைப் பெற்றுள்ளோம். இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் சிந்துவெளிக் காலம் முதல் நிலவிய கலைப் பாரம்பரியத்தை புலப்படுத்துகின்றன.

கந்தரோடையில் காணப்பட்ட கட்டடப் பாகங்களுள் முக்கியமானது பௌத்த சமயத்துடன் தொடர்பான ஸ்தூபிகளின் அமைப்பாகும். சுமார் இருபதுக்கும் மேற்பட்ட தூபிகளின் அத்திவாரங்கள் உள்ளன. மேற்கட்டுமானம் இன்றிக் காணப்பட்ட இத் தூபிகளுக்குரிய அத்திவாரங்கள் ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அத்திவாரங்களின் போக்குகளும் அமைப்புகளும் ஒன்றின் மேல் ஒன்றாக

ஸ்தூபிகளின் அத்திவாரம்



அமைந்துள்ளன. இதனால் அவையெல்லாம் ஒரே சமகாலத்தில் அமைக்கப்பட்டன அல்ல என்பதனைக் கண்டுணர முடிகின்றது.

சிந்துவெளியில் பலமுறை கட்டடங்கள் ஒன்றுக்கு மேல் மற்றொன்று அமைக்கப்பட்ட தன்மையை ஒத்த வகையில் இங்கும் கட்டட அமைவு அமைக்கப்பட்டது என்று கருதுவதற்கு இடமுண்டு.

கந்தரோடை மண்ணுள் இருந்து பல சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டன. ஆசன நிலையில் அமைக்கப்பட்ட வெண் வைரக்கல்லால் ஆக்கப்பட்ட புத்தர் சிற்பத்தின் சிறப்பியல்புகளை நோக்கும் போது சிந்துவெளியில் கிடைத்த ஆண் சிற்பம் ஒன்றின் முண்டத்தில் கை, கால், தலை என்பன எவ்வாறு பொருத்தப்பட்டதோ அதை ஒத்த வகையில் கை, கால்களை வெவ்வேறாகச் செய்து 'ஒட்டும்முறை' பின்பற்றப்பட்டிருக்கின்றமையைக் காணமுடியும். வலது பக்க முழங்கை சற்று வித்தியாசமான கற்துண்டு ஒன்றினால் ஆக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் அமைப்பு முறை அங்கியின் போர்வை மடிப்புகள், வலது தோள் மீதான போர்வையின் மடிப்புகளில் காணப்படும் ஒழுங்கு

சுடுமண் சிற்பம் - சிந்துவெளி




சிந்துவெளியில் கிடைத்த மதகுருவின் சிற்பத்தையும் ஞாபகப்படுத்துகின்றது.

கந்தரோடை ஒரு நகரக் குடியிருப்பாகவும் வர்த்தக மையமாகவும் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் பல வாணிப மையங்கள், தானியக் களஞ்சியங்கள், ஆலயங்கள் என்பன காணப்பட்டிருந்தமையை அண்மைக்கால தொல்லியல் மேலாய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இதனை ஒத்த வகையில் சிந்துவெளி நகர மையங்களிலும் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட போது கறுப்பு - சிவப்பு மட்பாண்டம் ஒன்றும் அதனுள் இருந்த 'முத்திரை மோதிரம்' ஒன்றும் கிடைத்தது. அந்த மோதிரத்தில் 'ஈரின எழுத்துக்கள்' காணப்பட்டன. மேல் வரியில் சிந்துவெளி எழுத்தும், கீழ்வரியில் தமிழ்ப் பிராமிச் சாசன வாசகமான 'கோவேந்த' அல்லது 'கோவேதம்' என்பதும் காணப்பட்டன.

கந்தரோடையில் கிடைத்த சிவந்த மட்பாண்டத்துண்டு ஒன்றில் ஓர் எழுத்தானது ஆனைக்கோட்டையில் கிடைத்த ஈரின எழுத்து முத்திரையின் மேல் வரியில் பொறிக்கப்பட்டுள்ள சிந்துவெளியின் எழுத்தினை ஒத்திருப்பதை ஒப்பிட்டு அறிந்து கொள்ளமுடியும்.

ஈரின எழுத்து வரிவடிவம்
ஆனைக்கோட்டை - கந்தரோடை



இந்த எழுத்துக் கலைவடிவத்தின்படி ஆனைக்கோட்டையிலிருந்து கந்தரோடை வரைக்கும் உள்ள வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் சமகாலத்தில் சிந்துவெளி வரிவடிவங்களைக் கையாண்ட மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது ஓரளவு வெளிச்சமாகிறது.

கந்தரோடையில் கிடைத்த இந்த சிறப்பு வரிவடிவமானது 'கோ' என்பதனை உணர்த்துவதற்கு பயன்படுத்தப்பட்ட முச்சூலக் குறியீடு என பொ.ரகுபதி குறிப்பிடுவதனை ஒத்திருக்கின்றது. எனவே, கந்தரோடை புராதன அரசிருக்கையின் அரச பதம் தொடர்பான வரலாற்றுப் பாரம்பரியத்துக்கும் சிந்துவெளி நாகரிக மக்களின் வழித்தோன்றல்களுக்கும் இடையில் ஏதோ ஒரு வகையில் இருந்த தொடர்பினை அறிய முடிகின்றது.

முன்னாளில் வழுக்கியாறு கடலேரியில் வந்து கலந்த கழிமுகப் பிரதேசம். இந்த முன்னாள் கழிமுகத்தின் அயலில் பரந்து கிடக்கும் வயல் வெளிகளில் துருத்திக் கொண்டு தெரியும் பழைய மண் மேடுகளை யாரும் காணலாம்.

அந்த நிலக்காட்சி அமைப்புக்குள் பொருந்திவராத மேற்படி பழைய மண் மேடுகளை பொ.ரகுபதி தொல்லியல் அகழ்வாராய்ச்சிக்குரிய இடங்களென அடையாளங்கண்டு கூறியுள்ளார்.

## ஒரு கலைப்பார்வை

இப்படியொரு மண்மேட்டின் அயலில்தான் 'ஆனைக்கோட்டை மனிதன்' எனப்படும் மூத்த தமிழன் ஒருவனின் எலும்புரு 1982இல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இப்படி இன்னும் எத்தனையோ கல்லுண்டாய் மனிதர்கள் - மூத்த தமிழர்கள் - அந்த மேடுகளின் அடியில் உறங்கக்கூடும். அவர்களையெல்லாம் முறையாகத் தட்டியெழுப்பி பேச வைத்தால் சில சமயம் சிந்துவின் "றொசெற்றாக் கல்வெட்டு" கல்லுண்டாய் வெளி

மட்பாண்டம் - வதிரி



யில் எங்காவது கிடைத்தல் கூடும்.

இன்னும் வாசிக்கப்படாத சிந்துவின் எழுத்துக்களை நாம் வாசித்தல் கூடும். இன்னும் வெளிவராத கதிரமலை ரகசியங்களையும் நாம் அறிதல் கூடும். இன்றுவரை சிந்துவையும் கந்தரோடையையும் சூழ்ந்துள்ள புதிர்களையும், மர்மங்களையும் விடுவிக்கவல்ல மந்திரத்திறப்பு அந்தக் கல்லுண்டாய் மனிதர்களிடம் இருக்கவும் கூடும். (முற்றும்)

**சத்தியசீலன் ஜெயவாணி**






# 794 ஆம் இலக்க பஸ் சேவை சீரில்லை என பயணிகள் முறைப்பாடு

சாவகச்சேரி,மே19

கனகன்புளியடி சந்தியூடாக யாழ்ப்பாணம் - கொடிகாமம் சேவையில் ஈடுபடும் 794ஆம் இலக்க வட பிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவை சீராக நடைபெறுவதில்லை எனப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படி பாதையூடாக செல்லும் பஸ் சில சந்தர்ப்பங்களில் கொடிகாமத்திலிருந்து பிரதான வழியூடாக (ஏ-9) சாவகச்சேரியூடாக தனது பயணத்தை தொடருகின்றது என்றும் இந்நிலையில் கனகன்புளியடி சந்தியூடாக மேற்படி பஸ்ஸில் பயணம் மேற்கொள்ளக் காத்து நிற்கும் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளர்கள் ஏமாற்றம் அடைய வேண்டிய நிலை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் - கூறப்பட்டது.

இதனால்,794ஆம் இலக்க தட பஸ்ஸிற்காக சுமார் 4மைல் தூர இடைவெளிக்குள் நுணாவில் சந்தி - கனகன்புளியடிச் சந்தி - புத்தூர் சந்தி பிரயாணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிய வந்தது.

(எ-31)



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மாள் சின்னரத்தினம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ரூபா ஒரு லட்சத்து 31 ஆயிரம் பெறுமதியான நிலையான வைப்புச் சான்றிதழை அவரது கணவரான ஓய்வுபெற்ற அதிபர் செ.சின்னரத்தினம் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸிடம் கையளிப்பதனைப் படத்தில் காணலாம்.

# மருந்தகர் சான்றிதழ் வைத்திருப்பின் வெளிநாடுகளில் பல வேலை வாய்ப்புகள்

வெளிக்கள மருந்தகர் பரீட்சை PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION இலங்கை மருத்துவக் கல்லூரிச் சபையால் (Ceylon Medical College Council) வருடந்தோறும் நடத்தப்படுகிறது. இந்த பரீட்சைக்கு வயது எல்லை இல்லை.

பரீட்சை எடுப்பதற்கு இரண்டு வருடம் அப்ரென்டிஸ் ஆக (Apprentice Pharmacist) ஸ்ரீலங்கா மருத்துவ சபையில் [illegible] பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்த ஒரு மருந்தகர் (Registered Pharmacist or Master Pharmacist) ஒரு வருடத்தில் ஐந்து பேரை தனது பயிலுநர் மருந்தகராக (Apprentice Pharmacist) ஸ்ரீலங்கா மருத்துவ சபையில் பதிவு செய்ய முடியும்.

பயிலுநர் மருந்தகராக பதிவு செய்ய குறைந்த பட்சம் கல்வித் தகைமைகள் பின்வருமாறு:-

ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சையில் (ஒரு தரம், இரண்டு தரம்) ஏதாவது ஒரு விஞ்ஞான பாடத்தில் [illegible] திறமைச் (credit) சித்தியும் ஆங்கிலம், கணிதம் இரண்டிலும் சாதாரண சித்தியும் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா மருத்துவ சபையில் ஒவ்வொரு புதன்கிழமையிலும் பயிலுநர் மருந்தகராக பதிவு செய்ய விரும்புபவர்கள் மாஸ்டர் மருந்தகரின் (Master Pharmacist கடிதத்துடன் தங்களது ஜி.சீ.ஈ. சாதாரணதர மூலப்பிரதியையும் தங்கள் தேசிய அடையாள அட்டையுடனும் நேரடியாகச் சமுகமளித்து "APPRENTICE PHARMACIST" ஆக பதிவு செய்வதற்குரிய INDENTURE FORM ஐ பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது இலங்கையில் Pharmacy நடத்துவதற்கு சுகாதார அமைச்சிடமிருந்து அனுமதி பத்திரம் எடுப்பதற்கு மேற்படி பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் Pharmacy இல் வேலை வாய்ப்புப் பெற பயிலுநர் மருந்தகராகப் பதிவு செய்தால் கூடிய வாய்ப்புகள் உண்டு. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மருந்தகர் (Pharmacist) பற்றாக்குறை அதிகம் உண்டு. இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கையில் 10,000 ரூபாவுக்கும் அதிக சம்பளத்தில் உடன் வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளன. நாடு பூராவும் மருந்தகர் பற்றாக்குறையால் மருந்தகங்களை மூட வேண்டிய அவல நிலை உள்ளது. இந்நிலை யாழ்ப்பாண குடாநாட்டிலும் உருவாகி உள்ளது. வெளிநாடுகளில் ஸ்ரீலங்கா மருத்துவ சபை மருந்தகர் சான்றிதழுக்கு வேலைவாய்ப்பு உண்டு. குறிப்பாக இந்தச் சபை பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதால் பொதுநலவாய நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கனடாவில் பிரஜா உரிமை (Immigrants) கோரும் விண்ணப்பதாரிகளுக்கு கூடிய புள்ளிகள் (Points) வழங்கப்படுகிறது.

**நடராசா இராசநேரு**
**[SAIRAH Pharmacy Education]**

இலங்கையில் மருத்துவ பிரதிநிதி (வேலை (Medical Representative), தோட்ட மருத்துவ உதவியாளர் (Estate Medical Assistant) வேலை போன்றவற்றிற்கு மருந்தகர் சான்றிதழ் (Pharmacist Certificate) குறைந்த பட்சம் தகைமையாக கருதப்படுகிறது. தற்போது மருந்தகர் சான்றிதழ் உடையவர்கள் எண்ணிக்கை இலங்கையில் மிகவும் குறைவாக இருப்பதால் உடன் வேலை வாய்ப்பிற்கு இந்தப் பரீட்சை மிகவும் பயனுள்ளதாக அமையும்.

# மணமகள் கோவிலில் காத்திருக்க திருமணத்தன்று மணமகன் மாயம்!

## கோண்டாவில் பகுதியில் சம்பவம்

இணுவில்,மே19

திருமணத்துக்கு மணமகள் காத்திருக்க மணமகன் திடீரென மாயமாய் மறைந்த சம்பவம் கோண்டாவில் கிழக்கு அரசடி வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

திருமண தினமான நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தொலைபேசி அழைப்பு எடுக்கச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து சென்றதாகவும் -

மேற்படி மணமகன் வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை என்றும் - கூறப்படுகிறது.

முகூர்த்த நேரம் நெருங்க நெருங்க மணமகனைக் காணாத மணமகனின் வீட்டார் மணமகனைத் தேட ஆரம்பித்தனர். தொடர்ந்து தேடியும் மணமகனைக்கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால், பொலீஸ் நிலையம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பணிமனை போன்றவற்றில் மணமகனைக் காணவில்லை என்று மணமகன் வீட்டார் முறையிட்டனர்

இதனிடையே மட்டுவிலைச் சேர்ந்த மணமகள் வீட்டார்திருமணம் நடைபெறவிருந்த மணமகன் வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயத்தில் வந்திறங்கி நீண்ட நேரமாகக் காத்திருந்தனர்.

இந்நிலையில் மணமகள் வீட்டாருக்கு மணமகனைக் காணவில்லை என்ற செய்தி தெரியவந்தது.

பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளவந்த மணமகள் வீட்டார் மற்றும் உறவினர்கள் அனைவரும் கவலையுடன் வீடு திரும்பினர்.

காணாமற் போனதாகக் கூறப்படும் மணமகனுக்கு 30 வயதாகின்றதெனவும் -

இவர் பல வருடங்களாக இந்தியாவில் தங்கியிருந்து விட்டு சில மாதங்களுக்கு முன்னர்தான் இலங்கை திரும்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

# சமுர்த்தி வங்கி கட்டடத்துக்கு காணி கிடைத்தது

செம்பியன்பற்று,மே19

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாவது சமுர்த்தி வங்கிக்கு உதவி அரசாங்க அதிபரால் அரச காணி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மருதங்கேணியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் சமுர்த்தி வங்கிக்கே இக்காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வங்கிக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு ரூபா 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-36)

# தென்மராட்சியில் தேங்காய் விலை பெரும் வீழ்ச்சி

தென்மராட்சி,மே19

தென்மராட்சி பிரதேச சந்தைகளில தேங்காயின் விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வாரம் 12ரூபாவிலிருந்து 15ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் நேற்றுமுன்தினம் தொடக்கம் 3ரூபாவிலிருந்து 7ரூபா வரை விற்பனை செய்வதைக் காண முடிகிறது.

அண்மையில் வீசிய கடும் காற்றினையடுத்து தேங்காய்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. (எ-117)

# அந்தண மாணவர் கௌரவிப்பு பெறுவர்

வலி.தெற்கு,மே19

ஆச்சார்ய அபிசேகம், உபநயனம் மற்றும் தேசிய மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற அந்தண மாணவர்கள் நியந்த்ரி அமைப்பினால் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

2001-2002 ஆண்டு காலப்பகுதிகளில் புதிதாக ஆச்சார்ய அபிசேகம், உபநயன பிரம்மோபதேசம் செய்து கொண்ட அந்தண சிரேஷ்டர்களும் மற்றும் தேசிய, மாகாண மட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று நிலைகளில இடம்பிடித்த அந்தண சமூகத்தினரும் இதுதொடர்பாக தமது விவரங்களை இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளர் நியந்த்ரி நல்லூர் சிவன் கோயில் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

# மின்கம்பத்தில் லொறி மோதி மூவர் காயம்!

மணல் ஏற்றுவதற்காக பளைக்குச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று கைதடிப் பிள்ளையார் கோவிலுக்கருகில் மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று காலை இடம பெற்றது. இவ்விபத்தில் லொறியில் பயணித்த சங்கானையைச் சேர்ந்த சேனாதி - சுரேஸ்குமார் (வயது 26), இராமசாமி தேவராசா (வயது 25), தேவராசா ரமேஸ் (வயது 23) ஆகியோர் காயமடைந்தனர்.

சாரதி காயங்கள் எதுவுமின்றி தப்பிக் கொண்டார். (ஒ-31)

# மருதங்கேணியில் ஐஸ் தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு

மருதங்கேணியில் ஐஸ் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக மருதங்கேணி உதவி அரச அதிபரால் அரசகாணி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஐஸ்தொழிற்சாலையை நிறுவுவதற்கென இரண்டு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-36)

# யுத்தகாலம் முடிவடைந்த பின்னரே மக்களிடம் ஆக்ரோஷம் அதிகரிக்கும்!

## உளவள ஆய்வாளர் தெரிவிப்பு

வலிவடக்கு,மே19

போர் நடக்கும் காலங்களைவிட போர் முடிவடைந்த பின்னர் மக்களிடையே கோபம், ஆக்ரோஷம் ஆகிய உணர்வுகள் மிகவும் அதிகரித்துக் காணப்படும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

மேற்கண்டவாறு அகவொளி குடும்ப உளவளத்துணை நிலைய இயக்குனர் அருட்திரு ஆர்.இராசநாயகம் அடிகளார் குறிப்பிட்டார்.

அகவொளி குடும்ப உளவளத் துணை நிலையத்தினால் மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் முழுநிலா நாள் கருத்தரங்கு அகவொளி நிலைய கேட்போர் கூடத்தில் அருட்திரு ஆர்.இராஜநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய அருட்திரு ஆர். இராஜநாயகம் அடிகளார் தெரிவித்ததாவது:-

' இன்று எங்களிடையே தொடர்ந்து ஆக்ரோஷ உணர்வுகள் அதிகரித்துச் செல்வதுடன் வன்செயல்களும் அதிகரித்துச் சென்றுகொண்டே இருக்கின்றன. இந்நிலை நல்லதொரு சமுதாயத்திற்கு உரியதன்று.

மக்களும் கூட இந்த ஆக்ரோஷ நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்டும் உருவாகிக் கொண்டும் இருக்கின்றார்கள். இத்தகைய ஒரு சூழ் நிலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இதனை எப்படிக் கையாண்டு இதனை இல்லாமல் செய்யலாம் என்பதை ஆலோசிக்க வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினரை நல்ல வாழ்விற்கு இட்டுச் செல்வதும் வழிகாட்டி அழைத்துச் செல்வதும் மிகவும் அத்தியாவசியமானதாகும்.'' - என்றார்.

ஆக்ரோஷ உணர்வுகளும் அதனை வழிப்படுத்தலும் என்ற கருப்பொருளில் உரையாற்றிய வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் உளவியலாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் கூறியதாவது:-

' ஒரு சிசுவின் கோப உணர்வுகள் அது பிறந்து மூன்றுமாத காலத்திலேயே உடம்பை புரட்டத் தொடங்கும் போதே ஆரம்பித்துவிடுகின்றது. பிள்ளையின் உணர்வுகள் என்பது பெற்றோர்களின் வளர்ப்பு முறையிலேயே தங்கியுள்ளது.

ஒரு பிள்ளையை பெற்றோர்கள் வளர்ப்பதுடன் ஆசிரியர்களும் கையாண்டு வருகின்றார்கள். அதன் அடிப்படையிலேயே பிள்ளைகளிடம் கோபமும் ஆக்ரோஷமும் காணப்படுகின்றன.

கோபிப்பது கூடாது என்று அர்த்தம் அல்ல. கோபம் கொள்பவர்கள் மீது நாம் அன்பும் அனுதாபமும் காட்ட வேண்டும் கோபம் கொள்பவரின் பின்னணியில் அவருடைய தேவை ஒன்றோ அன்றி பலவோ நிறைவேற்றப்பட வேண்டி இருக்கலாம்.

"ஆகவே கோபம் கொள்பவர்களை கண்டிப்பதைவிட அவருடைய தேவை என்னவென்பதை நாம் இனம் கண்டு கொள்ளவேண்டும். இதனை இனம் கண்டுகொண்டால் அங்கு பிரச்சினைகள், வன்முறைகள் ஏற்பட வேண்டிய சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்றார்.

(ஒ-86)

# பளை வைத்தியசாலையை புனரமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி,மே19

பளை வைத்தியசாலையின் வார்ட்டுகளை மீள நிர்மாணித்து நிரந்தர டாக்டர் ஒருவரையும் நியமிக்குமாறு பளைப் பிரதேச மக்கள் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர்.

தற்போது பளைப் பிரதேசத்தில் அறுபது சதவீத மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். இந்நிலையில் வடமராட்சி கிழக்கில் நடத்தப்பட்டு வந்த நடமாடும் வைத்தியசேவை நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது வாரத்தில் மூன்று நாள்கள் பளை ஆஸ்பத்திரியில் பிற்பகல் வேளையில் நடத்தப்படும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோர் தொகை அதிகரித்துள்ளது. அத்துடன் ஏ-9 வீதியூடாக வருவோரும் அவசர சிகிச்சைக்காக இந்த வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் பி.ப.1.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை இயங்கும் இந்த வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாமல் வீடு திரும்ப வேண்டியுள்ளது.

ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வசதி இருந்தும் நிரந்தர டாக்டர் இல்லாததால் அதன் சேவையை முழுமையாகப் பெறமுடியவில்லை.

இவ்விடயங்களை சுட்டிக்காட்டியே பொதுமக்கள் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள பளை ஆஸ்பத்திரியின் கட்டடங்களை உடனடியாக புனரமைத்து வாட்டுகளை ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

(ஒ-117)

# மார்ச் மாத நிவாரணத்துக்குரிய கட்டளைகள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,மே19

கடந்த மார்ச் மாதத்துக்குரிய நிவாரண ஒதுக்கீடுகளுக்கான வழங்கற் கட்டளைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் பணி இன்று யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இடம்பெறவுள்ளதாக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் இன்று காலை 9மணி தொடக்கம் 12மணி வரையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ப.நோ.கூ. சங்கங்கள் பிற்பகல் 10மணி தொடக்கம் 4மணி வரையும் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மார்ச் மாத நிவாரண விநியோகத்திலும், நுகர்வோர் தாம் விரும்பிய பட்சத்தில் பால்மா பக்கற்றுக்களைப் பெறலாம் என்றும் - அதற்குப் பதிலாக அதன் பெறுமதிக்கு அளவான நிவாரணத்துக்குரிய ஏனைய பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் தமக்குத் தேவையான பால்மா பக்கற்றுக்களின் தொகை விவரத்தை செயலகப் புனர்வாழ்வு பகுதியில் சமர்ப்பித்து அவற்றை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## கரபந்தாட்டம்

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் நா.கமலராசா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டி நவஜீவன் வி.க. எதிர் மட்டுவில் வளர்மதி வி.க.

அரியாலை ஐக்கிய வி.க. எதிர் இளையாணன் மத்திய வி.க. 'பி' அணி.

(ஒ-86)

# மாகாண மட்ட தமிழ்த்தின போட்டிகள் யாழ்ப்பாணத்தில்

## கல்வியமைச்சின் செயலாளர் தகவல்

வலிகாமம்தெற்கு,மே19

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ்த் தினப் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெற்ற அதிபர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் யாழ். வந்திருந்தனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலய பாடசாலைச் சமூகத்தினரை இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

வலய கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் உட்பட மாகாணக் கல்வித்திணைக்கள உயரதிகாரிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் அங்கு உரையாற்றுகையில்:-

அண்மைக்காலமாக எமது பகுதிகளின் கல்விநிலை தரத்தில் மிக குறைவடைந்துள்ளது. விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்து யாழ்ப்பாணத்தை பழைய கல்வி நிலைக்குக் கொண்டு வர சகலரும் முன்வர வேண்டும் - எனக் கேட்டுக்கொண்டார்.

பாடசாலைகளில் நிலவும் குறைநிறைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்ட அவர் குறைபாடுகளை நிவிர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (எ-152)

# கொடிகாமம் பஸ்நிலையம் வேறு இடம் மாறும்?

தென்மராட்சி,மே19

கொடிகாமம் நகர்ப்பகுதியில் பெரும் போக்குவரத்து இடநெருக்கடி ஏற்படுவதையடுத்து கொடிகாமம் பஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது.

ஏ-9 வீதியூடாக வரும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அடுத்தும் -

நகர்ப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் அதிகரித்து வருவதையடுத்தும் -

நகர்ப் பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாகவும்-

இதனை அடுத்தே பஸ் நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்ற ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும்- தெரிவிக்கப்பட்டது. (எ-117)


உ
சிவமயம்

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

சுபானு வருடம் 2003-05-04 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி பொன்னுத்துரை பராசக்தி

(சரவணை மேற்கு, கந்தசாமி கோயிலடியை பிறப்பிடமாகக் கொண்டவர்)



அவர்களின் வீட்டுக்கிருத்திய பூஜை, அன்னாரின் இல்லத்தில் இன்று (19.05.2003) திங்கட்கிழமை பகல் 11.00 மணிக்கு நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

66, ஜீ.பீ.எஸ்.வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(18142)

பொ. சிவபாலன் (மகன்)
பெறாமக்கள்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
-
03
-
1975



மறைவு
22
-
05
-
2000

## அமரர் முருகேசு கிறிஸ்ணவேணி

திதி: சங்கபாசதுர்த்தி

ஆண்டுகள்மூன்று போகவில்லை
போனதாய் நினைக்கின்றோம்
போகவே முடியாது - உம்
உருவம் எம் மனதில்
மாறாதம்மா!

முத்ததம்பி வீதி, மானிப்பாய். (சி27987) - குடும்பத்தினர்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 474 | டிக்கட்டின் நிறம் -சிவப்பு |
| திகதி | 16.05.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5912873-5920388 |

வெற்றி இலக்கங்கள் **02 21 27 41**

லக்கினம் தனுசு



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்வில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,348,050/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 155,850 | 10 | 1,558,500 |
| 2 இலக்கங்கள் | 14,348 | 20 | 286,960 |
| 1 இல + லக்கினம் | 14,160 | 30 | 424,800 |
| 2 இல + லக்கினம் | 1,258 | 100 | 125,800 |
| 3 இலக்கங்கள் | 399 | 500 | 199,500 |
| 3 இல + லக்கினம் | 27 | 5,000 | 135,000 |
| 4 இலக்கங்கள் | 02 | 100,000 | 200,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 186,044 | - | 2,930,560 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 2,930,560/-

தொடர் இல. 4930866க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 மே 20ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5914168-6-73
5916542-7-24
5913002-3-27
5914580-7-68
5913237-8-22

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3635992 இருந்து
3648001 வரை
சீட்டிழுப்பு இல. 1401
திகதி 17.05.2003



வெற்றி எண்கள் **07 18 28 29 48**
போனஸ் எண் **22**

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 68 | 10,000/- | 680,000/- |
| 3 | 3,726 | 500/- | 1,863,000/- |
| 2 | 62,739 | 20/- | 1,254,780/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 76,616 | 10/- | 766,160/- |

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 2,091,650/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.4,663,940/-

தொடர் இல. 2650234க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மே 21ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3637904-4-04
3643108-7-50
3637723-2-93
3637465-9-61
3639515-9-08

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# 25.05.2003 இதழில்

விலை 16 /=

# சுடர் ஒளி

✷ அதிகாரமுள்ள கட்டமைப்புக்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா?

✷ அபிவிருத்தி லொத்தர் சபை ஏற்படுத்தி வரும் நெருக்கடி

✷ குடாநாட்டை கலக்கும் சார்ஸ் பீதி!

✷ கட்சித் தாவல்களுக்கும் கடிவாளம் ஜம்போ 'சைஸ்' மந்திரிசபை குறைப்பு ஆளும் ப்பி.ஜே.பி. அரசின் அசகாய நடவடிக்கை.

✷ அமெரிக்கா அறியாததுமல்ல புலிகளுக்குத் புரியாததுமல்ல

✷ கொள்ளைக்காக கொலைகள் இச்சை தீர்க்க இழிசெயல்கள்




மதன் தொடர், பெண், அலைகளின் காவியம், திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை, பித்தன் பதில், இளஞ்சுடர், கலையமுதம், அதிசயம் ஆனால் உண்மை, மசாலா மிக்ஸ், ஆந்தையாரின் க்ரைம் டயறி, இணையத் தளத்தி லிருந்து......, சொற்சிலம்பம், கவிதைப் புனல், மகையகம் இன்னும் பல அம்சங்களுடன்....

# ஜே.வி.பியைப் பயன்படுத்தி முடிசூட முயற்சிக்கும் அனுரா

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பியினருக்குமிடையே உடன்பாடு காணப்படுவது தொடர்பான விடயம் தொடர்ந்து இழுபறியில் இருந்து வரும் இன்றைய நிலையில் ஆரம்பகாலம் முதல் ஸ்ரீ ல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையே நிலவிய நெருக்கம் குறித்து 'லங்காதீப' நாளிதழில் 'உபுல்யோசப் பெர்னாண்டோ' எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பயணம் முடிவடைகிறது."

ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜேவீர சிறையில் இருந்து விடுதலையான பின்னர் நாடு பூராவிலும் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் பேசிய பேச்சின் முக்கிய கருத்து வெளிப்பாடு இதுவாகும். அப்போது அவர் உரையாற்றிய கூட்டங்களின் மேடையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பதாகையிலும் இது குறிப்பிடப்பட்டிருந்தது. பண்டாரநாயகா குடும்பத்தின் ஹொரகொல்லா தோட்டம் சிதைக்கப்பட்டிருப்பது போன்றும் பண்டாரநாயகா சமாதி மற்றும் பண்டாரநாயகாவின் சிலை ஆகியவையும் அதில் வரையப்பட்டிருந்தன. அதன் கீழ்ப்புறத்தில் பண்டாரநாயகா குடும்ப உறுப்பினர்கள் யாவரும் வீழ்ந்து கிடப்பதாக தீட்டப்பட்டிருந்ததோடு, ஒரேயடியாக நிலத்தில் சாய்ந்து கிடப்பதாக அனுரா பண்டாரநாயகா சித்திரிக்கப்பட்டிருந்தார். அந்தவேளையில் விஜேவீர கலந்து கொண்ட சகல கூட்டங்களிலும் இந்தப்பதாகை பின்னணியில் வைக்கப்பட்டது. அக்கூட்டங்களில் பண்டாரநாயகா குடும்பத்தவரையும் ஸ்ரீ ல.சு.கட்சியையும் விஜேவீர கடுமையாகத் தாக்கிப் பேசிவந்தார். அப்படியிருப்பினும் அவரது முழு இலக்காக அமைந்தவர் அனுரா பண்டாரநாயகாவே இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் எதிரணி சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் சகல எதிர்கட்சிகளையும் உள்ளடக்கிய அரசு ஒன்றினை உருவாக்கும் நோக்கில், அனுரா பண்டாரநாயகாவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். அது தொடர்பான பேச்சுகளில் விஜேவீர நேரடியாகக் கலந்து கொள்ளாவிட்டாலும், அவரது பிரதிநிதிகள் குழு கலந்து கொண்டது. அப்பேச்சுகளின் போது ஜே.வி.பியினர் நிபந்தனைகள் சமர்ப்பித்த போதிலும், ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அத்தருணத்தில் ஜே.வி.பியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த விரும்பாததால் அப்பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. அப்பேச்சுக்கள் வெற்றியடைந்திருப்பின் பண்டாரநாயகா குடும்பத்தின் முடிசூடா மன்னனாக விளங்கிய அனுரா முடிசூடிய மன்னனாக மாறியிருப்பார். இன்றும் அனுரா பண்டாரநாயகாவுக்கு ஸ்ரீ ல.சு.கட்சி-ஜே.வி.பி இடையே இணக்கம் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமை இம்முடிசூடும் நோக்கிலேயாகும். அனுரா இம்முடிசூடிக்கொள்ளும் நோக்கில் ஜே.வி.பியுடன் இணைந்து அரசியல் பயணம் செய்ய விளைந்தது பல காலத்துக்கு முன்னராகும். அனுராவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது இன்று நேற்றல்ல



அவர் அந்த நாள்களிலிருந்தே ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தார்.

1971 கிளர்ச்சிக்கு பின்னர் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையிலிருந்தே, அனுரா முதன் முதலாக ஜே.வி.பியினருடன் இணைந்து செயற்பட உற்சாகம் காட்டலானார். அவ்வேளையில் சுமார் பத்தாயிரம் ஜே.வி.பி. உறுப்பினர்களை ஒன்றிணைத்து உதவுவோர் முன்னனி என்ற பெயரில் அமைப்பொன்றினை அனுரா உருவாக்கினார். அவரே அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். அவ்வேளையில் பலர் இவ்வித அமைப்பு உருவாக்கப்பட்டமை குறித்து அதிருப்தியடைந்தனர். அந்த நிலை குறித்து அனுரா ஜே.வி.பியினால் கவர்ந்திழுக்கப்பட்ட இந் நாட்டின் படித்த சிங்கள பௌத்தர்களின் திறமையை ஒன்று திரட்டும் நோக்கிலேயே நான் இவ் அமைப்பை உருவாக்கினேன் என்று தெரிவித்தார்.

அனுராவின் இக்கூற்று முற்றிலும் உண்மையே. அனுரா கூறிய சிங்கள பௌத்த திறமைசாலிகளை உள்ளடக்கிய படித்தவர்கள் கூட்டத்தை உருவாக்கியது அனுராவின் தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகா தலைமை தாங்கிய 56ஆம் ஆண்டின் அரசியல் புரட்சியே தனது பிள்ளைகளை அரசியல் அரங்கில் இடைநடுவில் விட்டு 1956இல பண்டாரநாயக்கா காலமானார். அவர்களை ஒன்று திரட்ட ஸ்ரீமாவோ தலைமையிலான ஸ்ரீல.சு. கட்சியாலோ அன்றேல் இடதுசாரி கட்சிகளாலோ முடியவில்லை ஆகக் குறைந்தது அவ்வேளையில் பரம்பரை அரசியல் பற்றிய அனுபவங்கள் கூட அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்கள் அவ்விதம் அரசியல் பின்னணியில் பிளவுபட்டிருந்த வேளையில் அவர்களை ஒரு முகப்படுத்தியது அதே பரம்பரையை அரசியல்துறை இளைஞனான ரோகண விஜேவீரவே. விஜேவீர இச்சிங்கள பௌத்தர்களின் திறமையை ஒன்று சேர்த்தது மட்டுமன்றி அத்திறமையை பயன்படுத்தி நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஸ்ரீலங்காவின் வரலாற்றில் முதற்றடவையாக ஆயுதப்போராட்டத்தையும் நடத்தினார்.



இந்த இளம் பரம்பரை பக்கம் யாவரும் கண்களைத் திறந்து பார்த்தது இந்த ஆயுதப் போராட்டத்தின பின்னரேயாகும். அனுரா பண்டாரநாயகா அரசியல் அரங்கில் காலூன்றத் தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்ததும் அச் சமயமேயாகும். அனுராவின் தந்தையாரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகாவின் தலைமையில் 1956இல் இடம்பெற்ற அரசியல் புரட்சியின் பின்னர் இவ் இளைஞர் கூட்டம் ஆயுதப் போராட்டம் மூலம் அரசியலில் கால்பதிக்க முயற்சித்ததும், அது தோல்வியடைந்ததன் காரணமாக சிறையில் வாட நேர்ந்ததும் இக்காலகட்டத்திலேயாகும். அனுரா உண்மையில் பண்டார நாயகாவின் இரத்த வாரிசு. 1971 ஆயுதப் புரட்சியை நடத்தியவர்கள் பண்டாரநாயகாவின் அரசியல் பின்னணியில் வளர்ந்தவர்கள். வேறு வகையில் கூறுவதாயின் அனுரா பண்டாரநாயகாவும் இக்குழுவினரும் அரசியல் அரங்கில் சகோதரர்கள் போன்று இயங்கியவர்கள். 1971 ஆயுதப் புரட்சியின் பின்னர் அனுரா தமது அரசியல் பயணத்தில் அவர்களையும் இணைத்துக்கொள்ள நினைத்தமைக்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

ஆனால், அம்முயற்சியும் தோல்வியையே தழுவியது. ஆயினும் இதனால் அனுரா தனது முயற்சியை கைவிட்டுவிடவில்லை. ஜே.வி.பி. தனது இரண்டாவது ஆயுதப்போராட்டத்தை மேற்கொண்ட 1987 - 1988 காலப் பகுதியிலும் அனுரா ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட ஆர்வம் காட்டினார். அந்த வேளையில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் அப்போதைய ஜே.வி.பி.யினரின் நியாயமற்ற நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு அனுரா முயன்றார். அந்தவேளையில 1988 ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக ஜே.வி.பியினருடன அவர் பேச்சுகளை ஆரம்பித்திருந்தார். அது மட்டுமன்றி நாடாளுமன்றத்தைக் கலைத்து சகல கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகிக்கும் கூட்டு அரசொன்றை நிறுவி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலையும் நடத்துவதாயின் அக்கூட்டு அரசில் ஜே.வி.பியினரையும் சேர்த்துக்கொள்ள முடியுமென அனுரா அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கு உறுதியளித்திருந்தார். அவ்வேளையில் அவர் ஜே.வி.பியினருடன் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தேர்தல் தொகுதிகளை ஒதுக்குவது தொடர்பாக மட்டுமல்ல, உருவாக்கப்படும் அரசின் அமைச்சுக்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பாகவும் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தார். ஜே.வி.பியினர் விதித்த நிபந்தனைகளை ஏற்க சிறிமாவோ விரும்பாத காரணத்தால் அப்பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை.

ஆயினும் அனுரா பண்டாரநாயகா தனது முயற்சிகளைக் கைவிடவில்லை. இன்று ஸ்ரீ ல.சு.கட்சிக்கும் ஜே.வி.பியினருக்குமிடையேயான பேச்சுக்கள் உண்மையில் அனுராவின் மூன்றாவது முயற்சியாகும்.

1987 - 1988 காலப்பகுதியில் அனுராவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே தூதுவேலை பார்த்தவர் மாத்தறையைச் சேர்ந்த அரிய புலே கொடவே. இன்று அத் தூதுவேலையைச் செய்து வருபவர் மாத்தறையைச் சேர்ந்த மங்கள சமரவீர ஆவார். அன்று ஆரிய புலேகொட ஜே.வி.பிக்கு ஆதரவளித்த ஸ்ரீ ல.சு. கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக இருந்தார். இன்று மங்கள சமரவீரவும் ஜே.வி.பிக்கு ஆதரவான ஸ்ரீ ல.சு.கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராகவுள்ளார். அன்று ஆரிய புலேகொடவினால் தம்முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை. அவர் கட்சியை விட்டு விலக வேண்டிய அளவுக்கு அத் தோல்வி அவரைப் பாதித்தது.

மங்கள சமரவீரவும் அவ்விதம் தோல்வியடைய வேண்டி ஏற்படுமா?

அவ்விதம் தோல்வியடைய வேண்டி ஏற்படுமாயின் அது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது தொடர்பாக உருவாகியுள்ள கருத்து வேறுபாடு காரணமாகவே ஏற்படும். 1987 - 1988 காலப் பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஸ்ரீ ல.சு. கட்சியும் ஜே.வி.பியும் ஒரே விதமான கொள்கையையே கொண்டிருந்தன.

அக்கொள்கையை முற்றுமுழுதாக மாற்றியமைத்தவர் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆவார். சந்திரிகா எந்த ஒரு தருணத்திலும் ஜே.வி.பியுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நினைக்கவில்லை. 1971 ஜே.வி.பி. கிளர்ச்சிக்குப் பின்னர் பண்டாரநாயகா குடும்பத்தைச் சேர்ந்த மூத்தமகள் சுனேத்ரா பண்டாரநாயகாவும், குடும்பத்தின் முடிசூடா மன்னனான அனுரா பண்டாரநாயகாவும் ஜே.வி.பியினருடன் நெருங்கிய உறவைப் பேணிவந்தபோதும், சந்திரிகா இடதுசாரிக் கட்சிகளுடனேயே நெருக்கமாக இருந்து வந்தார். அவர் எப்போதும் பாரம்பரியம் மிக்க இடதுசாரிக் கட்சிகளுடனேயே அரசியல் பயணம் செய்ய நினைத்தார். பாரம்பரியமிக்க இடதுசாரிக் கட்சிகளுக்கும் சிறிமாவோவுக்குப் பின்னர் சந்திரிகாவுக்கு மகுடம் சூட்டி அவரை பிரதமராகவோ அன்றேல் ஜனாதிபதியாகவோ ஆக்குவது அவசியமாகவிருந்தது. அவ்வேளையில் அவர் விஜயகுமாரதுங்கவுடன் இணைந்தமையால் இடதுசாரிக் கட்சிகள் விஜயகுமாரதுங்கவைப் பற்றிக்கொண்டன. இதனை அனுரா ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் தமது அரசியல் பயணத்தைத் தொடர சந்திரிகாவைத் தெரிவு செய்ததை உணர்ந்ததால்தான் அனுரா, ஜே.வி.பியுடன் இணைந்து தன் அரசியல் பயணத்தை மேற்கொள்ளத் தயாரானாரா என்பதைக் கூற இயலவில்லை.

எப்படியான போதிலும் இவ்விருவரின் அரசியல் பயணங்களிலும் பெரும் வித்தியாசங்கள் உள்ளன. அனுரா சிங்கள இனத்தின் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட முடிவெடுத்தார். ஆனால், சந்திரிகா நாட்டில் வாழும் சகல இன மக்களும் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா என்ற இனத்தின் நலனைக் கருத்தில் கொண்டு இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட முடிவுசெய்தார். விஜயதுங்கவுடன் சேர்ந்து சந்திரிகா ஸ்ரீ ல.சு. கட்சியிலிருந்து வெளியேறி மக்கள் கட்சியை உருவாக்கிய பின்னர் இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீ ல.சு. கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் வேறுபட்ட கொள்கையையே பின்பற்றலானார். ஆயுதந்தாங்கிய தமிழ் அமைப்புக்களின் தலைவர்களுடன் பேசி இனப் பிரச்சினைக்குப் பேச்சு மூலமான தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டையே சந்திரிகா கொண்டிருந்தார். அந்நிலைப்பாட்டின் காரணமாகவே அவர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு தன் ஆதரவை வழங்கினார். ஆனால், சிறிமாவோ, அனுரா உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். ஜே.வி.பியினரின் இரண்டாவது கிளர்ச்சிக்கு இவர்களது இந் நிலைப்பாடு மிக உறுதுணையாயிருந்தது. இதனாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.வி.பியினர் மேற்கொண்ட இரண்டாவது கிளர்ச்சியை ஸ்ரீல.சு.கட்சி நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டது. இதற்காக அவர்கள் அனுராவைப் பயன்படுத்தினர். அந்தக்கால கட்டத்தில் அனுராவையும் ஸ்ரீ ல.சு.க. மற்றும் ஜே.வி.பி ஆகிய தரப்புக்களையும் சந்திரிகா கடுமையாக விமர்சித்துவந்தார். தனது தாயார், தனது தம்பி, ஸ்ரீ ல.சு.கட்சியினர் மற்றும் ஜே.வி.பியினர் ஆகியோர் யுத்தத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் இனவாதிகளென அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். இவ்விதம் ஸ்ரீ ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியோரை அவர் விமர்சித்து வந்ததன் காரணமாகவே அவரது கணவர் விஜயகுமாரதுங்க கொலையுற நேர்ந்தது.

விஜயகுமாரணதுங்க கொலை செய்யப்பட்ட பின்னர் சந்திரிகா ஓர் உண்மையை உணர்ந்து கொண்டார். அதாவது ஸ்ரீ ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பியின் நிலைப்பாடு காரணமாக எதிரணியால் சிறுபான்மை இன மக்களை ஒன்று திரட்டி, அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாதெனவும், அவ்விதம் சிறுபான்மை இன மக்களின் ஆதரவில்லாமல் ஒரு போதும் தேர்தலில் வென்று அரசமைக்க முடியாதெனவும் உணர்ந்து கொண்டார். அவரது எண்ணம் சரியானதே. 1988 இல் ஜனாதிபதித் தேர்தலின்போது சிறுபான்மை இன மக்களின் ஆதரவினாலேயே பிரேம



தாச வெற்றிபெற முடிந்தது. சந்திரிகா வெளிநாட்டில் தங்கி, மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வந்து ஸ்ரீ ல.சு. கட்சியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட பின்னர் முதலில் அவர் மேற்கொண்ட நடவடிக்கை 1987 - 1988 காலப் பகுதியில் இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீ ல.சு. கட்சி மற்றும் ஜே.வி.பியினா கொண்டிருந்த நிலைப்பாட்டை மாற்றியமைத்தமையேயாகும். சந்திரிகாவால் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் தேர்தலில் வெற்றியை அடைய முடிந்தது. இக் கொள்கை மாற்றம் காரணமாகவேயாகும். அவர் அம்மாற்றத்தை ஏற்படுத்தியதும், தேர்தலில் வெற்றி பெற்றதும், ஸ்ரீ ல.சு.கட்சி கடைப்பிடித்து வந்த இனப்பிரச்சினை தொடர்பான கடும் கோட்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலமாகும். தனித்தன்றி, இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்தே இதனைச் சந்திரிகாவால் நிறைவேற்ற முடிந்தது.

2001 பொதுத் தேர்தலின் பின்னர் அனுரா பண்டாரநாயகா மீண்டும் ஸ்ரீ ல.சு.கட்சியில் இணைந்து கொண்டதையடுத்து, மீண்டும் ஸ்ரீ ல.சு.கட்சி 1987 - 1988இல் ஸ்ரீ ல.சு. கட்சி - ஜே.வி.பி. கொண்டிருந்த கடும் கோட்பாட்டு நிலைக்கு மாற்றமடைந்தது. இந்நிலை குறித்து இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு நடவடிக்கையாகப் பின்வாங்கி நிலைமையை அவ

**தமிழில்: வியெஸ்ரீ**

தானித்தவாறிருந்தன. 1987 - 1988 காலப்பகுதி நிலைமை போன்றே இன்றும் அனுரா ஜே.வி.பியுடன் நெருக்கமாகி இடதுசாரிக்கட்சிகளை குறை கூறி விமர்சித்து வருகின்றார்.

இந்நிலையில் சந்திரிகா என்ன செய்யவுள்ளார்?

அவர் தன் கொள்கையினின்றும் மாறி, ஸ்ரீ ல.சு.கட்சியை மீண்டும் மாறத்துக்கு உள்ளாக்க அனுராவுக்கும், ஜே.வி.பியினருக்கும் இடமளிப்பாரா?

அவர் அனுரா மற்றும் ஜே.வி.பியினர் விரும்பும் விதத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வாரா?

ஜே.வி.பியினருடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் முடிசூடிக் கொள்ள அனுரா காட்டும் ஆர்வம் சந்திரிகா காரணமாகவே இதுவரையில் வெற்றியளிக்கத் தவறியது. முன்னர் இதற்காக அனுரா முயற்சித்த சகல சந்தர்ப்பங்களிலும் அவா சந்திரிகாவுக்கு எதிராக இயங்கிய நிலையே காணப்பட்டது. ஆனால், இப்போது சந்திரிகாவுடன் இணங்கிய நிலையில் தன் புதிய முயற்சியை ஆரம்பித்துள்ளார். ஆனால், அவரது இப்புதிய முயற்சிக்கு இன்றுள்ள பெரிய பாதிப்பு, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சந்திரிகா இப்போது கடைப்பிடித்து வரும் கடும்போக்குக் கொள்கையே என்பது அபூர்வமானதொரு விடயமாகும். ★

# மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் 2 ஓட்டங்களால் ஆஸி. அணிக்கு வெற்றி

மேற்கிந்திய அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

7 போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் மேற்கிந்திய அணி வெற்றிபெற்றது. அதையடுத்து ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

அவ்வணி 40ஆவது ஓவரில் 183 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 5 விக்கெட்டுக்களை இழந்தது. எனினும் 6ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த மைக்கல் பெவனும் இயன் ஹார்வியும் 62 பந்து வீச்சுக்களில் 87 ஓட்டங்களைக் குவித்தனர். இதனால் 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 270 ஓட்டங்களைப்பெற்றது ஆஸ்திரேலிய அணி.

பெவன் 44 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், ஹார்வி 30 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணியில் கிறிஸ் கைல்லும், ரிக்கார்ட்டோ பொவெனும் முதலாவது விக்கெட்டுக்காக 14.1 ஓவர்களில் 75 ஓட்டங்கள் குவித்தனர்.

அவ்வணி 24ஆவது ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

ஆட்டம் மீண்டும் ஆரம்பமானவுடன், டக்வோர்த் - ஜ்ராயிஸ் விதியின்படி மேற்கிந்திய அணி வெற்றி பெறுவதற்கு 37 ஓவர்களில் 208 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது

எனினும் 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது மேற்கிந்திய அணி.

இதனால், ஆஸ்திரேலிய அணி 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டியின் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் இயன் ஹார்வி பிரகாசித்தார். எனினும் சிறப்பாட்டக்காரராக ரிக்கி பொன்ரிங் தெரிவானார்.

# இந்திய - பாக். கிரிக்கெட் குறித்து லண்டனில் பேச்சு நடத்தத் திட்டம்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு தரப்புக் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பாக இரு நாடுகளின் தலைவர்கள் மீண்டும் பேச்சு நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் மாநாடு லண்டனில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டின் போது இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் ஜக் மோகன் டால்மியா, பாக். கிரிகெட் சபையின் தலைவர் தாகிர் ஸியா ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இவ்விருவரும் இம்மாத ஆரம்பத்தில் துபாயில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். எனினும் இப்பேச்சுக்களில் உறுதியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும், லண்டனில் நடைபெறும் பேச்சுக்களின்போது எதிர்கால போட்டி அட்டவணைகள் குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு நாடுகளுக்கிடையில் ஒருநாள் போட்டிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விரு போட்டிகளில் முதலாவது போட்டி பாகிஸ்தானில் நடைபெறவெண்டுமென பாக். கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

மேற்படி மாநாட்டின் போது, பாகிஸ்தானுடனான போட்டிகளில் இந்திய அணி விளையாடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்து இந்திய அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து உறுதியான பதிலைப் பெறுவதற்கு பாக்.கிரிக்கெட் சபைத்தலைவர் திட்டமிட்டுள்ளார்.

# இந்தியா - பாகிஸ்தானிடையே செப்ரெம்பரில் ஒருநாள் கிரிக்கெட்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஒருநாள் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருநாடுகளிலும் போட்டிகளை நடத்துவதை இந்திய அரசாங்கம் கொள்கை ரீதியில் ஏற்றுக்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.இதையடுத்தே இப்போட்டிகளை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உத்தேசித்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானில் ஒரேயொரு போட்டியில் விளையாடுவதற்கு அனுமதிக்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஜக் மோகன் டால்மியா இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விக்ரம் வர்மாவிடம் கடிடம் மூலம் கோரியுள்ளார்.

"எமது திட்டத்தின் படி,இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாவது அல்லது நான்காவது வாரத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பாகிஸ்தானில் ஒருநாள் போட்டியொன்று நடைபெறும்.

"அதையடுத்து சில நாள்களில் இந்தியாவில் இரு அணிகளுக்குமிடையில் ஒருநாள் போட்டியொன்று நடைபெறும்."- இவ்வாறு டால்மியா மேற்படி கடிதத்தில் தெரிவித் துள்ளார்.

பாகிஸ்தானுடனான போட்டிகள் தொடர்பாக ஐ.சி.சியுடன் சங்கடமான நிலையில் இந்திய கிரிக்கெட் சபை உள்ளது எனவும் டால்மியா தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையில் [illegible] போட்டியொன்றை ஹொக்கி சுற்றுப்[illegible] நடத்துவதற்கும் இந்திய விளையாட்டுத்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், கிரிக்கெட் சபையின் திட்டம் குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்யப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் சுற்றுப் போட்டியை அடுத்த வருடம் ஆரம்பத்தில் பாகிஸ்தான் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளும் இறுதியாக 1999 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் மோதின.

## இங்கிலாந்து அணியில் புதிய வீரர்கள்

ஸிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணியில் புதிய வீரர்கள் மூவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜேம்ஸ் அன்டர்சன், ஜேம்ஸ் கேர்ட்லி, அந்தனி மெக்ராத் ஆகியோரே இம்மூவருமாவர்.

13 பேர் கொண்ட இவ்வணியில் வேகப் பந்து வீச்சாளர் அன்டி கட்டிக் சேர்க்கப்படவில்லை. சகலதுறை வீரர் அன்ரு பிளின்டொவ் இவ்வணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். எனினும், காயம் காரணமாக அவர் போட்டியில் பங்குபற்றுவாரா என்பது சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.

## மைதானத்தில் தர்க்கம்

# சர்வான், மெக்ராத் மன்னிப்பு கோரினர்

ஆஸி. - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியின் போது வாய்த்தகராறில் ஈடுபட்ட ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச் சாளரான மெக்ராத், மே.இ.தீவுகள் அணியின் உப தலைவர் சர்வான் இருவரும் பரஸ்பரம் மன்னிப்பு கோரியுள்ளனர்.

அன்ரிகுவாவில் நடைபெற்ற 4ஆவது டெஸ்ட் போட்டியின் 4ஆவது நாள் ஆட்டத்தின் போது மெக்ராத், மே.இ.தீவுகள் அணியின் உபதலைவர் சர்வான் இருவருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது.

போட்டியின்போது ஏற்பட்ட இந்த வாய்த் தகராறு தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை கவலை தெரிவித்திருந்தது.

ஆஸ்திரேலிய பத்திரிகைகளும் இச்சம்பவம்தொடர்பாக ஆஸ்திரேலிய அணியினரை குறை கூறியிருந்தன.

இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து பேட்டியளித்த சர்வான், இரு வருக்கும் இடையே நடைபெற்ற வாய்த்தகராற்றின் போது பேசிக்கொண்டமைபற்றி விவரிக்கவில்லை. இருப்பினும் இருவரும்ஒருவருக்கொருவர் நட்புடன் இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்த சம்பவத்திற்காக கிரிக்கெட் விளையாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு நாங்கள் இருவரும் ஒருவர் ஒருவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டோம்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய வானொலிக்கு பேட்டியளித்த சர்வான் தெரிவித்தார்.

வாய்த்தகராற்றில் ஈடுபடுவதில் ஆஸ்திரேலிய அணியினர் முதலிடத்தில் இருப்பதாகக் கூறப்படுவது பற்றிய கேள்விக்கு பேட்டியின் போது பதிலளித்த சர்வான் கூறுகையில்:-

வாய்த்தகராற்றில் ஈடுபடுவதில் முதலிடத்தில் இருக்கிறார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது. இந்த சம்பவத்தை பொறுத்த மட்டில் எங்களுக்கிடையே எந்தப் பிரச்சினையும் கிடையாது என்று கூறினார்.

# 50 வயதில் மீண்டும் களமிறங்கினார் கூச்

முன்னாள் இங்கிலாந்தின் கிரிக்கெட் அணித் தலைவரான கிரஹம் கூச் வெள்ளியன்று பிராந்திய போட்டியொன்றின் போது களத் தடுப்பில் ஈடுபட்டார்.

இன்னும் 2 மாதங்களில் தனது 50ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ளார் கூச். தற்போது எஸக்ஸ் பிராந்திய அணியின் பயிற்றுநராகக் கடமையாற்றுகின்றார்.

வெள்ளியன்று லங்காஷையர் அணியுடனான போட்டியின்போது எஸக்ஸ் அணி வீரர்கள் இருவர் காயம் காரணமாக களத்திலிருந்து வெளியேறினர். இதனால் மாற்று வீரராக களமிறங்குவதற்கு கிரஹம் கூச் மட்டுமே தகுதியானவராக இருந்தார். 7ஓவர்கள் அவர் களத் தடுப்பில் ஈடுபட்டார்.

எஸக்ஸ் அணிக்காக 1974இல் முதன் முதலில் கிரஹம் கூச் விளையாடினார். 7வருடங்களுக்கு முன் முதல்தரப் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெற்றார்.

# ரோம் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் தோல்வி

ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியுற்றார்.

இத்தாலியின் ரோம் நகரில் நேற்றுமுன்தினம் இப்போட்டி நடைபெற்றது. அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும் பிரெஞ்சு வீராங்கனையான அமேலி மோர்ஸ் மோரவும் இதில் மோதினர்.

தரவரிசையில் 4 இடத்தைப் பெற்றிருந்த அமேலி மோர்ஸ்மோ இப் போட்டியில் 1-6, 7-5, 6-3 விகிதத்தில் வெற்றி பெற்றார்.

இவ்விருவரும் 6 தடவை மோதியுள்ளனர். இவற்றில் மோர்ஸ்மோ வெற்றி பெற்றமை இதுவே முதல் தடவையாகும். செரீனா கடந்த வருடம் இச்சுற்றுப் போட்டியில் சாம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியில் மோர்ஸ் மோவுடன் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஜ்டர்ஸ் மோதவுள்ளார்.

கிளிஜ்ஸ்டர்ஸ், மற்றொரு அரையிறுதிப் போட்டியில் ஜப்பானிய வீராங்கனை அய்சுஜியாமாவை 6-3, 6-2 என்ற விகிதத்தில் தோற்கடித்தார்.

## மரண அறிவித்தல்

### பொன்னர் மாரிமுத்து

(ரெபேக்காள் அம்மாள்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வதிவிடமாகவும் கொண்ட ரெபேக்காள் அம்மா நேற்று (18.05.2003) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னரின் அன்பு மனைவியும் அருளாநந்தராசா, காலஞ்சென்ற அற்புதராசா மற்றும் செல்வநாயகம்,ராசநாயகம் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனைகள் இன்று(19.05.2003)திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சுண்டுக்குளி இலங்கைப் பெந்தக்கோஸ்தே சபையில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊர்காவற்றுறை,
யாழ்ப்பாணம். (18149)

தகவல்:
பொ.ராசநாயகம்(மகன்)


லிபேட்டி அச்சுவேலி
விஜயகாந்த், சிம்ரன், விவேக் நடித்த ரமணா (புதிய)
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ்
ரஜனி,ரம்பா, சௌந்தர்யா நடித்த அருணாச்சலம் (புதிய)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
CANNIBAL

லஷ்சுமி சினிமா (இணுவில்)
நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பத்மினி,பாலையா, தங்கவேலு மற்றும் பலர் நடிப்பில்
தில்லானா மோகனாம்பாள்
11.00, 3.00, 6.30 (பு.நேரம்) (18146)

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், சிம்ரன், கிரண், ரோஜா நடித்த அரசு (புதிய)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.) (18126)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடாக குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின் புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30 (C/27626)

பரீட்சை எழுதலாம்
2003.தரம் 5 புலமைப் பரிசில்பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான
முற்றிலும் எதிர்பார்க்கப்படும்
புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை
தயாரிப்பு: சரா,பனி
வடமாகாண மாணவர்கள் அனைவரும் தோற்றலாம்
பரீட்சை எழுதியபின் புள்ளி வழங்கப்படும்
பரீட்சைக் கட்டணம் 20/= மட்டும்
இன்று முதல் பதிவு செய்யலாம்
பரீட்சை: 23.06.2003 பி.ப 4.30 மணி
நல்லூர் சயன்ஸ் அக்கடமி (நல்லூர் கோயில் முன்பாக)
சிங்களம் சனி, ஞாயிறு 6.30 p.m. E.S.பியதாஷ (18147)

தொலைபேசி இணைப்புக்களுடன்
மேசைத் தொலைபேசி விற்பனைக்கு உண்டு
எந்தப் பிரதேசத்தில் இருந்தும் சிக்கல்கள் இல்லாமல் மிகத் தெளிவாக உரையாடக்கூடிய முறையில் இணைப்புகள் உடன் தரப்படும்.
பவர் செல்லுலர்
185, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (விஸ்சர் தியேட்டர் முன்பாக, நியூ லலீதா முதலாம் மாடி.)
91,1/2,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
இரவு உள்வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம். I.D.D. ஒரு நிமிட அழைப்பு 25/= மட்டுமே. உத்தரவாதம் உண்டு.
T.P: 071- 399220
0777 - 242416
எமது முகவர்கள்
வேறு பிரதேசங்களிலும் முகவர்கள் தேவை. தொடர்புகொள்ளவும்.
பவி தொலைத் தொடர்பு நிலையம், நெடுந்தீவு. 071-381192 / 071 - 381187
மிது. கொம் கே.கே.எஸ். றோட், கன்னாகம். 021-5560, 021-5686, 0777-720139
கதன் தொலைத் தொடர்பு நிலையம். மிருசுவில். 0777-584896
வ. அரவிந்தன் வாளம்பாடி, சுழிபுரம். 0777-550949
குட்டி கடை சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு. 071-399208
N. சண்முகநாதன் திக்கரை களபூமி, காரைநகர். 071-299264
ஆர். தயாகரன் மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. 0777-244524
ஆர். ஆனந்தன் (பாலசிங்கம்) கலைவாணி வீதி, சித்தன்கேணி. 071-297316
M.P. நாதன் இந்திரா தொலைத் தொடர்பகம், நயினாதீவு, அனலைதீவு. 071-793224
எஸ். சிவகுமார் விஜய் வீடியோ சென்ரர், 3ம் வட்டாரம் பெருங்காடு, புங்குடுதீவு. 071-399113
திருப்பதி தொலைத் தொடர்பு நிலையம் இல.16, மெமோறியல் வீதி, மானிப்பாய். 021-3143,021-2887,021-2757, 021-3197, 0777-722914
(18143)

# அவசர மீட்புப் பணிகளில் ஈடுபட படகுகளை இந்தியா அனுப்புகிறது

கொழும்பு, மே19

தென்னிலங்கையில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் அவசர மீட்புப் பணிகளில் பயன்படுத்துவதற்காக ஆறு றப்பர் படகுகளை இந்தியா இலங்கைக்கு வழங்கி உள்ளது.

இலங்கை அரசு கேட்டுக் கொண்டதை அடுத்து மனிதாபிமான ரீதியில் இந்த உதவிகளை இந்தியா வழங்கியிருக்கிறது.

இதேவேளை - வெள்ளத்தினால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று கொழும்பு வர இருந்தது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்கள் மட்ட உப குழுவொன்றை பிரதமர் ரணில் நியமித்திருக்கின்றார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுவதை இந்த உபகுழு மேற்பார்வை செய்யும். அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் அமைக்கப்பட்ட இந்த உபகுழுவில் அமைச்சர்களான ஜோன அமரதுங்க, திலக் மாரப்பன, ரவீந்திர சமரவீர ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். (ஐ-9)

# கல்வி, பொருளாதார ரீதியாக எம்மை திட்டமிட்டு ஒடுக்குவதற்கு முயற்சி

## பரிசளிப்பு விழாவில் மாணவர் பேரவைத் தலைவர் உரை

எமது மக்களை கல்வி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசுகள் திட்டமிட்ட முறையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து அவற்றுக்கு எதிராக நாம் எதிர் நீச்சல் போட்டு முன்னேற வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன்.

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி பரிசளிப்பு விழாவில் நிலையப் பரப்புக்கு உட்பட்ட புலமைப்பரிசில பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

நிலையத் தலைவர் சா.தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டிலே நீண்டதொரு விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டு இருக்கின்றது. எமது எதிர்கால சந்ததியின் நலனுக்காக இளஞ்சந்ததி ஒன்று உயிரைத் தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கிறது.

எமக்காக அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கும் தமிழீழத்தில் எதிர்கால சந்ததி அறிவாளிகளாக வாழ வேண்டும். ஏனைய நாடுகளின் வல்லுநர்களோடு போட்டியாக எமது தமிழினமும் வளர்ந்து முன்னேறவேண்டும்.

கடந்த காலங்களிலே பல யுத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த எம்மீது எதிரி பாரிய - திட்டமிட்ட - கல்வி, பொருளாதார ரீதியிலான ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டான். ஆனால், அவற்றுக்கு முகங்கொடுத்து நாங்கள் எதிர்நீச்சல் போட்டு வந்துள்ளோம். அதுபோல தொடர்ந்தும் நாம் முன்னேறவேண்டும்.

கற்றவர்கள் தமது சமூகப் பொறுப்புக்களை நன்கு உணர்ந்து செயற்படவேண்டும். தாம் கற்ற கல்வியைக் கொண்டு எமது இளஞ்சந்ததியினருக்கு ஏற்ற கல்வியை அவர்கள் வழங்க வேண்டும். அப்போதுதான் ஒட்டுமொத்த சமூகமும் அறிவுடைய சமூகமாக வளரும்.

ஒவ்வொருவரும் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்றதைப்போல ஏனையோரது கஷ்டங்களையும் புரிந்து கொண்டு ஏனையோருக்கும் கல்வி புகட்டவேண்டும் - என்று தெரிவித்தார்.

யாழ் மாவட்டக் கல்விப் பொறுப்பாளர் கவியன்பன் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

காலத்துக்குக் காலம் ஸ்ரீலங்கா அரசுகள் எமது மாணவர்கள் மீது மிகுந்த சிரமமான - கடினமான - கல்வித் திட்டங்களைத் திணித்து வந்துள்ளன. அவ்வாறு திணிக்கப்பட்ட கல்வித் திட்டங்களினால் எமது மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள்.

தமிழினத்தை அடக்கி ஒடுக்க வேண்டு மென்று கங்கணம் கட்டிய ஸ்ரீலங்கா அரசுகள் அதற்காக எமது மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றன.

எனினும், எமது மாணவர்கள் கல்வித் தரத்தில் முன்னேறித்தான் வந்திருக்கின்றார்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பிரதிநிதி இ.அரிகரன், உடுவில் மான்ஸ மகாவித்தியாலய அதிபர் ச.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-4)

## இலகு தவணைக் கடன்

சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்புவோருக்கும், விவசாயத்தில் ஈடுபட முன்வருவோருக்கும் இலகு தவணைக் கடன் வசதிகளை செய்து கொடுக்க அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

தமது எல்லைப் பரப்பினுள் வாழும் மக்களின் சுயதொழில், விவசாய முயற்சிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக சங்கம் இலகு தவணைக் கடன்களை வழங்கி வருகின்றது.

## முன்னாள் தவிசாளரை காணவில்லை!

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ். வேலாயுதம் (ரங்கன்) என்பவரைக் கடந்த 12ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது மனைவி மட்டக்களப்பு பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் வவுணதீவில் நெல் வியாபாரம் செய்பவர். புளொட் இயக்கத்தின் முன்னாள் மாவட்ட பொறுப்பாளராவார். இவர் 2001ஆம் ஆண்டு புளொட் இயக்கத்திலிருந்து விலகினார் எனவும், பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் எனவும் கூறப்பட்டது. (ஐ)

## புதிய குருவுக்கு பொது வரவேற்பு

உடுவில் செபமாலை மாதா ஆலயத்தின் புதிய குருவாகப் பதவியேற்கும் அருட்சகோதரர் தேரவி ராஜுக்கு செபமாலை மாதா ஆலயத்தினாலும், ஊர்மக்களாலும் எதிர்வரும் புதன் கிழமை ஆலயத்தில் வைத்து பொது வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

யாழ்.மறை மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான புதிய குருக்களாக யாழ்.ஆயர் அதி.வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்ட பத்து அருட்சகோதரர்களுள் தே.ரவிராஜும் ஒருவராவார். இவர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் இறையியல், மெய்யியல் கல்வியை மேற்கொண்டு புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தபட்டவராவார்.

## மீண்டும் வெயில்! வெள்ளம் வடிகிறது

இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு வாரமாக பெய்த மழை ஓய்ந்து நேற்று சூரிய ஒளி வீசியது. இரத்தினபுரி நகரில் எட்டு அடி உயரத்தில் பாய்ந்த வெள்ளம் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது.

இரத்தினபுரி, கொழும்பு போக்குவரத்துச் சேவைகள் நேற்று மாலை மீண்டும் ஆரம்பமாகின. ஆனால், இரத்தினபுரி சம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி பதுளை வீதிகளில் மண்சரிவு காரணமாக போக்குவரத்து தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

## சிறுவனின் சடலம் ஒப்படைப்பு

கிணற்றில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவித்து சிறுவன் ஒருவனின் சடலம் நேற்றுமாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மானிப்பாய், டச்சு வீதியை சேர்ந்த மகேந்திரன் அஜந்தன் (வயது 15) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான். (ஐ)

## சேதங்களை முறையிட விசேட கரும பீடங்கள்

தென்னிலங்கையில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து முறைப்பாடு செய்ய மூன்று பொலிஸ் நிலையங்களில் விசேட கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப்பாடுகளை இங்கு தெரிவிக்கலாம்.

குருவிட்ட 045 - 23840, காலி 09-33333, மாத்தறை 041 - 22202. பொலீஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## படை முகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை-

மல்லாகம் நீதிமன்ற வளாகப் பகுதியில் ஒன்றுதிரண்ட நூற்றுக் கணக்கான பொது மக்கள், அங்கு படையினர் முகாம் அமைத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அடையாள வீதிமறிப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். வீதியின் குறுக்கே மரங்கள், சிமேந்துத் தூண்கள் போன்றவற்றைப் போட்டு தடையை ஏற்படுத்தினர். இதனால் அளவெட்டி - மல்லாகம் ஊடான போக்குவரத்து சிறிது நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது.

இதனையடுத்து, அவ்விடத்துக்கு வருகை தந்த சுன்னாகம் இராணுவ முகாம் பொறுப் பதிகாரி, அங்கு மறியலில் ஈடுபட்டிருந்த பொது மக்களுடன் கலந்துரையாடினார். அதனையடுத்து வீதித்தடை நீக்கப்பட்டது.

தொடர்ந்தும் சுமார் 3 மணி நேரம் அங்கு அடையாள எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் பின்னர் கலைந்து சென்றனர். (ஐ-86-5-9)

## இரத்தினபுரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இரத்தினபுரி எலபாத்தவில் ஏற்பட்ட மண் சரிவில் ஒரு கிராமம் முழுவதுமே புதையுண்டிருக்கின்றது. 75இற்கும் அதிகமானோர் உயிரிழந்துவிட்டனர் என்று அஞ்சப்படுகிறது.

இலங்கையில் 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான வெள்ள அழிவு இது என்று கூறப்படுகிறது.

*(விரிவான மற்றொருசெய்தி 2ஆம்பக் கத்தில்)* (ஐ-9)

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலும் இன்று ஜி.சீ.ஈ. பரீட்சைகள் நடைபெறமாட்டா. இது சம்பந்தமான அறிவிப்பு விலைத்தாபன விநியோக மையங்களுக்கு நேற்றிரவு அறிவிக்கப்பட்டதாக யாழ்.வலையக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-9)

SUBRA
சித்தன்கேணி
ஆரம்பம்:
21.05.2003 வியாழன் பி.ப.4.00
★ இதுவே இறுதிப் பிரிவாகும்.
★ ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
பேச்சு சிங்களம்
உத்தியோகத்தர்களுக்கானது
திரு.லீனா கிருஷ்ணன்
சனி, ஞாயிறு 6.00 - 8.00p.m.
★ 40 மணித்தியாலம் மட்டும்.
★ சரளமாக பேச, எழுத, வாசிக்க.
★ பாடத்திட்டத்திற்கான முழுமையான கட்டணம் ரூபா 750/=
ஆரம்பம்: 24.05.2003
(C/27968)

விக்னா
கல்வி நிறுவனம்
O/L பிரிவு 6
Day Class
ஆரம்பம்: 21-05-2003
(8.30 - 2.30)
இதுவே இறுதிப் பிரிவு
(18133)

வீடு/காணி தேவை
யாழ்.நகரில் அல்லது யாழ் - பலாலி வீதியினை அண்டிய பகுதியில் திருநெல்வேலிக்கு இடையில் வீடு அல்லது வெற்றுக்காணி விலைக்குத் தேவை.
உடன்
தொடர்பு கொள்ளவும
T.P. 026 - 20835
0776 - 033575 (17999)

BARATHY
சித்தன் கேணி
SPOKEN ENGLISH
With Grammar
LECTURER
NISHANTHAN
(Dip. in English)
புதிய பிரிவு ஆரம்பம்:
22.05.2003
வியாழன் 4.00p.m. (ப.நே.)
Note:- நீங்கள் அடிப்படை விளக்கத்துடன் சுலபமாக எழுத, இலகுவாகப் பேச, வாசிக்க 6 மாதத்தில் Grammar உடன் முடித்துக்கொள்ளலாம். (18145)

மொடேன் கல்வி நிலையம்
நெல்லியடி
SPOKEN ENGLISH
With Grammer
By: Nishanthan
(Dip.in.English)
புதிய பிரிவு
இன்று ஆரம்பம்:
19.05.2003 திங்கள் 3.30
(பி.நே.)
(18060)

இணுவில்
பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ்.றோட் - இணுவில்
SPOKEN ENGLISH
With Grammer
Lecturer:
By: Nishanthan
(Dip.in.English)
புதிய பிரிவு ஆரம்பம்:
21.05.2003
புதன் 4.00 p.m. (ப.நே.)
Note:- நீங்கள் அடிப்படை விளக்கத்துடன் சுலபமாக எழுத, இலகுவாகப் பேச, வாசிக்க 6 மாதத்தில் Grammar உடன் முடித்துக் கொள்ளலாம். (18144)

"எதிர்காலம் உங்கள் கைகளில்...."
உயர் தொழில்சார் கற்கை ஊடாக
உங்கள் வேலைவாய்ப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ள
aat கற்கை நெறியுடன் இணைந்துகொள்ளுங்கள்.
OUR Special offer for A/L 2003 Students
100 % FREE
(A/L பெறுபேறுகள் கிடைக்கும் வரை)
தொடர்பு: Carrer.Com Institute.
No.79, Main St. Jaffna.
அலுவலக நேரம்: தினமும் 10.00a.m - 2.00p.m
Note: 25.05.2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
aat விரிவுரைகள் தமிழ், ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும்.
(C/27971)

இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / சிப்பு சிங்கம் கடையருகில்.
(18092)

## மரண அறிவித்தல்

### வைத்தியாம்பிள்ளை அருளப்பு

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியாம்பிள்ளை அருளப்பு நேற்று மாலை காலமானார்.

அன்னார் அருளப்பு இராசம்மாவின் அன்புக் கணவரும் அழகரட்ணம் (யாழ்.பல நோக்கு கூ. சங்கம்), நித்தியானந்தன் (ஜேர்மனி), லீலாமலர், புஷ்பராணி, பேரின்பநாயகி, சுகாயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பநாயகம் (கொழும்பு), உதயநாதன், அன்ரன் மேனாட், மகேந்திரம், நிரோசா, பபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4.00மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காகப் புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
அ. அழகரட்ணம் (மகன்)
(யாழ் ப.நோ.கூ. சங்கம்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (18150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.